கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(07.07.2019 - 07 ஆடி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 211, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



# மனிதர்கள் சந்தித்துக் கொண்டாலும் மனங்கள் சந்திப்பதில்லை



மன்னார் மறைமாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கையின் ஆன்மிக வரலாற்றுச் சிறப்பு மிக்க மடுமாதா ஆடித் திருவிழா 02.07.2019 செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது. இத்திருவிழா மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை ஆயருடன் இணைந்து கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு. J.D. அந்தனி ஜெயக்கொடி ஆண்டகையும் கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள். இத்திருவிழாத் திருப்பலியில் அருட்பணியாளர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், அரச உயர்நிலைப் பணியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர்நிலைப் பணியாளர்கள் மற்றும் பெருந்தொகையான பக்கதர்கள் கலந்து சிறப்பித்தனர். அன்றைய திருப்பலியில் தமிழ் மறையுரையை மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆற்றினார். அதன்போது ஆயர் கூறியதாவது, இத்திருவிழா கன்னிமரியாள் எலிசபெத்தம்மாளை சந்தித்ததை பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம். இவர்களின் சந்திப்பு இருமனங்களைக் கொண்ட உண்மையான ஒரு மறை சந்திப்பாக இருக்கின்றது. அத்தோடு மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு சந்திப்பாகும். இன்று நம்மிடையே இப்படியான சந்திப்புக்கள் நிகழ்வது அரிது. எமது மனங்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தவேண்டும். அங்கே மகிழ்ச்சியை உண்டாக்கவேண்டும். இவ்வாறு நாம் சிறிய மாற்றத்தைக் கொண்டுவருகின்ற போது மனிதத்தன்மை மேம்படுத்தப்படுகின்றது. தற்காலத்தின் தகவல் தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைந்துள்ளது. இணையத்தளம், பேஸ்புக், வட்ஸ்அப் போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றோம்... தொடர்ச்சி 15ம் பக்கம்..

## பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் நிதியுதவி



பாஸ்கு ஞாயிறு அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கு ஆயர் இல்லத்தினால் வழங்கப்படும் உதவி சேவை, கர்தினால் அவர்களின் வழிக்காட்டுதலில் நீண்டகால உதவித்திட்டமாகும். துணை ஆயர் மேதகு. J.D. அந்தனி ஜெயக்கொடி ஆண்டகை ஞானார்த்த பிரதீப்பய பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் கூறினார். பாஸ்கு காலத்தில் எமது மக்களுக்கு ஏற்பட்ட அனர்த்தம் நிகழ்ந்த கணம் தொடங்கி இன்றுவரையும், இனிவரும் காலங்களிலும் கொழும்பு உயர் மறைமாவட்ட அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வழிகாட்டுதலில் உதவி சேவையினால், உதவிகள் மாதத்திற்கு, இரு மாதத்திற்கொரு தடவை, வருடத்திற்கு என தொடர்ந்து வழங்கப்படும் என துணை ஆயர் மேதகு. J.D. அந்தனி ஜெயக்கொடி ஆண்டகை தெரிவித்தார்கள். தொடர்ந்தும் தமது கருத்தைத் தெரிவிக்கையில், இந்த உதவி சேவை வேலைத்திட்டம் பற்றி ஊடகங்களுக்கு அறிவிப்பதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிப்பட்ட முறையில், மனரீதியில் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்ப்பதே நோக்கமாயிருந்தது. உதவி சேவை செயல்திட்டம் வாழ்நாள் முழுவதும் அங்கவீனமானவர்களாக இருப்பவர்களுக்கு, பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் எமது மறைமாவட்ட உதவிசேவையினால் தொடர்ந்து வழங்கப்படும். அதேபோல் மக்களால் வழங்கப்பட்ட உதவிப் பணத்தொகை பாதிக்கப்பட்ட ஆலயங்களை சீரமைக்க பாவிக்கப்படவில்லை என்றும் கூறினார்கள்.


## இலங்கை பற்றிய நியதிகளை கலந்துரையாடிய திருத்தந்தையும் பேராயரும்



பாஸ்கு ஞாயிறு நடந்த அனர்த்தத்தைப் பற்றி கேள்வியுற்றபோது நான் மிகவும் துக்கமடைந்தேன். இறந்துபோன, காயமடைந்த மக்களுக்காக நான் மன்றாடினேன் என்று திருத்தந்தை கூறினார். இந்த அனர்த்தத்தினால் சிதைந்த அவர்களின் வாழ்வினை மீண்டும் எப்படி கட்டியெழுப்புவது பற்றி கலந்துரையாடினார்கள்.

பின்னர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இத்தாலியில் ஊடகவியலாளரைச் சந்தித்த போது பாஸ்கு ஞாயிறு தாக்குதல் நடத்த அடிப்படை வாதிகளினால் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என இந்திய புலனாய்வு துறையினரால் பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டும், இலங்கை அரசின் தலைவர்கள் எவராலும் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தாக்குதல் பற்றி அறிந்திருக்கவில்லை என இலங்கை அரசால் கைகழுவ முடியாது என கூறினார். தாக்குதல் பற்றி எமக்கு முன்னறிவித்திருந்தால் எமது மக்களை திருப்பி அனுப்பி அவர்களின் உயிர்களை பாதுகாத்திருப்போம் என்று தொடர்ந்து தெரிவித்தார்.


## ஆயர் திருநிலைப்படுத்தல் ஆண்டுவிழாவும், பெயர்கொண்ட விழாவும்



ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு. ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை – ஆடி 17 ஆயர் திருநிலைப்படுத்தல்



மேதகு ஆயர். கிளிட்டஸ் பெரேரா ஆண்டகை – ஆடி 11 ஆயர் திருநிலைப்படுத்தல்



ஓய்வுபெற்ற ஆயர் மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆடி 3 பெயர்கொண்ட விழா ஆடி 30 ஆயர் திருநிலைப்படுத்தல்

இவர்கள் உடல் உள சுகத்தோடு தமது ஆயர்த்துவ பணியை தொடர்ந்திட ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.

இம்மாதம் 28ம் திகதி

**தேசிய குருக்கள் தினம்**

கருப்பொருள்

**“நீங்கள் நீங்கலல்ல, கிறிஸ்துவே”**

## தில்லத்துவ புனித அந்தோனியார் ஆலய அர்ச்சிப்பு



நீர்கொழும்பு தில்லத்துவ பங்கில் புதிய புனித அந்தோனியார் ஆலய அர்ச்சிப்பின் போது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, அரசியல் அதிகாரங்களைப் பெற நரபலியிடுவது பிழையாகும் என்றார். கடந்த பாஸ்கு ஞாயிறு அனர்த்தம் நடத்திய இளைஞர்கள், சிலரின் அரசியல் தேவைகளுக்காகவே மனித வெடிகுண்டுகளாக மாறினார்கள்.... தொடர்ச்சி 15ம் பக்கம்..

**நீதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள், நேர்மையுடன் செயல்பட்டு, உலகில் நிலவும் அநீதியை அழிக்கும் படியாக திருத்தந்தையுடன் இணைந்து செபிப்போம்.**

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்



**அனைத்துலகோரே கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள். (தி.பா 66)**

# தன்னைவிட நாட்டையும் நாட்டு மக்களையும் நினைக்கும் அரசியல் தலைவர்களே எமது நாட்டுக்குத் தேவை.





கடந்த ஆனி மாதம் 12ம் திகதி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் மனித குண்டு தாக்குதலுக்குக் பின்பு சீரமைக்கப்பட்டு மீள் அர்ச்சிப்பு வழிபாடுகளின்போது அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு கூறினார்.

தன்னைவிட நாட்டையும் நாட்டு மக்களையும் பற்றி நினைக்கும், மக்களை அன்பு செய்யும், உண்மை, நியாயம் நீதி, பாதுகாப்பளிக்கும், அனைவருக்கும் பொருளாதார, சமுதாய, ஆன்மீக வாழ்வை வளப்படுத்தக்கூடிய, மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய முதுகெழும்புள்ள உண்மையுள்ள அரசியல் தலைவர்களே எமது நாட்டுக்குத் தேவை.

எமது நாட்டில் வாழும் பலரும் இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களால் குழப்பமான மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். மீண்டும் இவ்வாறான பயங்கரமான அனர்த்தங்கள் நடக்குமா? என்ற சந்தேகத்துடன் பயத்துடன் வாழ்கின்றார்கள். என்று தொடர்ந்து கூறினார்கள். அன்றைய தினம் திருத்தலத்தில் உயிர் நீத்த 54 பேரின் பெயர்கள் பொதிக்கப்பட்ட பலகையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பல அரசியல் தலைவர்கள் கலந்துக் கொண்டார்கள். ஆனி மாதம் 13ம் திகதி புனித அந்தோனியார் திருவிழாவின் போது கர்தினால் ஆண்டகை மும்மொழிகளில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். துணை ஆயர்களான ஜே.டி. அன்தனி ஆண்டகை, மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையும் பல அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளும் கலந்துக்கொண்டார்கள்.

திருவிழா திருப்பலியின் பின்பு நற்கருணை நாதர் திருப்பீடம் ஆசீர்வதிக்கப்பட்டதுடன் புனித. அந்தோனியார் திருச்சுரூப ஆசீர்வாதமும் இடம்பெற்றது. அன்றைய தினம் வேறு எந்த திருப்பலிகளும் திருச்சுரூப பவனியும் இடம்பெறாது என்றும் இனி வரும் நாட்களில் வழமைப்போல் அனைத்து வழிபாடுகளும் இடம்பெறும் என்றும் திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஜுட் ராஜ் அடிகள் அறிவித்தார்கள்.

# அருட்தந்தையே! உமக்கு நன்றி கூறுகின்றோம்.



யாழ் மண்ணின் மண்டைதீவு நகரின் மைந்தனும், எம் பங்கின் தந்தையுமானவரே! உம்மை வாழ்த்துகின்றோம். நன்றி உணர்வோடு எமக்கு செய்த சேவையினை நினைக்கின்றோம். 48 வருடகாலமாக அமலமரித் தியாகிகள் சபையின் குருமணியாக பல பங்குகளில் நீங்கள் பணியாற்றினீர்கள். கடந்த 7 ஆண்டு காலமாக எம் பங்கின் குருவாக, எம் அனைவரின் தந்தையாகவும், பங்கு கட்டுமாணப்பணியின் செயற்பாட்டிற்கு பங்கு மக்களோடு இணைந்து அயராத உழைப்பால், அதில் வெற்றியும் கண்டோம்.

அன்பு காட்டும் பட்சத்தில் அன்பராகவும், உதவி தேவைப்படும்போது உதவியாளராகவும், கண்டித்து திருத்தும் வேளையில் கண்காணிப்பாளராகவும், எம்மை வழிநடத்தியதை நாம் இவ்வேளை நினைக்கின்றோம். மழலைகளோடு மழலையாகவும், ஆலோசனை கூறுவதில் ஆலோசகராகவும், மறைப்பணிக்கும் எம் வளர்ச்சிக்கும் நீங்கள் செய்தவற்றை நாங்கள் மறக்கமுடியாது. வாழ்க உங்கள் பணி, வளர்க உங்கள் சேவை. இன்னும் பல காலம் உடல் உள, ஆரோக்கியத்துடன் மரியாளின் பரிந்துரையும், இறைவனின் ஆசீரும், நிறைவாகப் பெற்று செல்லும் பங்கில் உங்கள் சேவை தொடர வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன், இப்பங்கையும், எங்களையும் விட்டுச் செல்வது மனத்துரயராக இருந்தாலும் உங்கள் பணி எல்லோருக்கும் தேவை எனும்பட்சத்தில் நாங்கள் உங்களை வாழ்த்தி அனுப்புகின்றோம். - நன்றி

**தகவல் : திருமதி. ரஜனி, புதுச்செட்டித்தெரு பங்கு**



திரு. திருமதி ரெஜினா, கிறிஸ்டோபர் அவர்கள் புனித அந்தோனியார் மூலம் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களுக்கு நன்றி கூறும் முகமாக மரத்தினால் செய்யப்பட்ட புனித அந்தோனியார் திருச்சுரூபம் ஒன்றை கண்டி மறைமாவட்ட டயகம பங்கு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அன்பளிப்பாக அளித்தார்கள். இதை கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு. வியானி பர்னாந்து ஆண்டகையிடம் ஒப்படைத்தார்கள். ஆயர் அச்சுரூபத்தை ஆசீர்வதித்து பங்குத்தந்தை டொமினிக் ராஜ் அடிகளாரிடம் ஒப்படைத்தார். இவற்றை படத்தில் காணலாம்.

# மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தைப் பார்வையிட்ட பேராயர்.

மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தைப் பார்வையிட சென்ற அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள், எமது நாட்டில் சகல மதங்களைப் பின்பற்றுபவர்களும் சகல இனமக்களும் தத்தமது அடையாளங்களுடன் சுதந்திரமாக வாழ்வதை நாம் காண வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்!

கடந்த பாஸ்கு ஞாயிறு தாக்குதலில் இத்தேவாலய நம்பிக்கையாளர்கள் 30 பேருக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த தேவாலயத்தவர்கள் கத்தோலிக்கரல்லாவிட்டாலும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்த அனைவரையும் பாதுகாப்பது எமது கடமையாகும். அங்கு இறந்தவர்களின் பெற்றோர், பிள்ளைகள், உறவினர்களையும், படு காயமடைந்தவர்களையும் சந்தித்து தமது அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார்.



இச்சந்திப்பில் கர்தினாலுடன் மட்டக்களப்பு ஆயர் மேதகு பொன்னய்யா ஜோசப் ஆண்டகையும், மேலும் பல அருட்தந்தையர்களும் கலந்துக்கொண்டனர்.



1971ஆம் கலவரத்தின் போதும் வடக்கு யுத்தத்தின் போதும் பீடனைகளுக்கு உள்ளான எமது இளம்பருவத்தினர் மத அடிப்படைவாதிகளினாலும் தாக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இந்நிலை தொடராமல் தடுப்பது, நாட்டுத் தலைவர்களும் மதத்தலைவர்களினதும் தலையாய கடமையாகும். நீர்கொழும்பு மறைகோட்டம் குருமுதல்வர் சிஸ்வான் டி குருஸ் அடிகளால், நீர்கொழும்பு கட்டுவாபிட்டி புனித செபஸ்தியார் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற சிறுவர் சிறுமியர்களுக்கான விளையாட்டு, விநோத நிகழ்வுகளின் இறுதியில் தமது கருத்துக்களைத் தெரிவித்தார். தொடர்ந்து தமது கருத்தைத் தெரிவிக்கையில் எமது நாட்டின் எதிர் கால தலைவர்களான இச்சிறுவர்கள் ஆரோக்கியமான வாழ்வும் நல்ல கல்வியிலும், நல்ல மன நிலையும் பெற வேண்டும். அவர்களின் வாழ்வு மத வழிகாட்டுதலின்படி வளர்க்கப்பட வேண்டும். மறைமாவட்டம் செத்சரண நிலையத்தினால் இலங்கை ஒலிம்பியன்ஸ் அமைப்பின் அனுசரணையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வு இலங்கை ஒலிம்பியன்ஸ் அமைப்பின் தலைவி சிறியாணி குலவங்ச அவர்களுடன் செயலாளர் தமயந்தி தர்ஷா உள்ளிட்ட ஒலிம்பியன்ஸ் வீராங்ணைகளான ஜுலியன் பொலிங், சுனில் குணவர்தன ஆகியோருடன் விளையாட்டு வீர வீராங்கணைகளும் பங்குகொண்டதுடன் நிகழ்ச்சி இறுதியில் வந்து கலந்துக்கொண்ட சிறுவர் சிறுமிகளுக்கும் பரிசுல்களும் சின்னங்களும் வழங்கப்பட்டது.

15



மாடம்பே பங்கின் திரு இருதய ஆண்டவரின் ஆலயத் திருவிழா திருப்பலி கடந்த 28ம் திகதி வெள்ளிக்கிழமை செத்சரண இயக்குனர் அருட்பணி. மகேந்திர குணதிலக்க அடிகளாரின் தலைமையில் பங்குத்தந்தையும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். இவற்றை படத்தில் காணலாம்.

**தகவல் மற்றும் படம் : கல்தேரா**

## திருஇருதய ஆண்டவர் திருவிழா திருப்பலி

கடந்த மாதம் 28ம் திகதி ஆயர் இல்லம் பொரல்லையில் திருஇருதய ஆண்டவர் திருவிழா திருப்பலி பேராயரின் சிற்றாலயத்தில் துணை ஆயர்களான மேதகு ஆயர் மெக்வல் சில்வா ஆண்டகை, மேதகு. ஆயர் அன்ரனி ஜயகொடி ஆண்டகையினரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின்போது துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா அவர்களின் மறையுரையிலிருந்து....

1ம் வாசகம் எசேக்கியல் புத்தகத்தில் 99 ஆடுகளை விட்டுவிட்டு காணாமல்போன ஆட்டைத் தேடி செல்கிறார்; கண்டடைந்தார். பேரானந்தத்துடன் மற்ற 99 ஆடுகளுடன் சேர்த்து விடுகிறார். ஆயன் என்பவர் ஆட்டுக்குட்டிகளின் முன்னால் செல்பவர். ஆயரின் குரலை ஆட்டுக்குட்டி அறியும். ஆட்டுக்குட்டியின் குரலை ஆயரும் அறிவார். இதுவே நற்செய்தியாகும். தன் ஆடுகளைக் காப்பாற்ற கொடிய மிருகங்களுடன் போராடுவார், வெற்றிக் காண்பார். காப்பாற்ற முடியாவிட்டால் தன் உயிரைத் தியாகம் செய்வார் தன் ஆட்டுக்குட்டிகளுக்காக.

நானும் நீங்களும் இயேசு கிறிஸ்து என்ற நல்லாயனின் ஆட்டுக்குட்டிகளாவோம். இன்று ஆயர் இல்ல குடும்பத்தின் திரு இருதய ஆண்டவரின் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். ‘இருதயம்’ என்பது ‘அன்பாகும்’ அதனாலேயே இயேசுநாதர் தமது வாழ்வை ஆடுகளாகிய எமக்காக பலியாக்கி தன் திருஇருதய அன்பை வெளிப்படுத்தினார். இந்த திருஇருதய குடும்பத்தில் இருக்கும் எமக்கு உரிமையான பொறுப்பு உண்டு. நாம் செய்யும் சேவையை அன்பு - பாசத்துடன் செய்ய வேண்டும். அன்பு - பாசத்துடன் எமக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களைச்செய்யும்போது நாமும் இயேசுவின் திரு இருதயத்துடன் இணைகிறோம். அதனாலேயே இன்றைய திருவிழா எமது திருவிழாவாகும். அதனால் ஆயர் இல்லத்தில் நாம்செய்யும் எமது சேவையை இயேசுவின் இதயத்துடன் இணைந்து அன்புடன் ஆற்றுவோம். உங்கள் அனைவருக்கும் திரு இருதய ஆண்டவரின் திருவிழா வாழ்த்துக்கள்.

உங்கள் பங்குகளின் நடைபெறும் நிகழ்வுகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்
ஞானஒளி,
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.
மின்னஞ்சல் :
cgnanaoli@yahoo.com

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔළි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
07 ஆடி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

## துன்பம் துயரம், சோதனை வேதனை, கண்ணீர் கவலை நிறைந்ததுதான் கிறிஸ்தவர்களின் வாழ்வு. ஆனால் இவை தற்காலிகமானவை. எதுவும் நிரந்தரமல்ல என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

பரிசுத்த திருச்சபையானது இம்மாதம் புனிதர்களான தோமையார், தூய மரியகொறற்றி ஆகியோரை நினைவு கூர்கின்றது. மரியகொறற்றி இயேசுவிற்காக அதிகமான துன்பங்களையும் வேதனைகளையும் மிகவும் பொறுமையோடு தாங்கிக்கொண்டு பாவத்தைவிட மரணத்தை பாக்கியம் எனக்கருதி மறைசாட்சியானவர். துன்பத்தில், வறுமையில், கண்ணீரில் வாழும் எம் அனைவருக்கும் மேலான எடுத்துக்காட்டாக விளங்குகின்றாள். வாழ்வில் எத்தனை தடைகள் வந்தாலும் கஷ்டங்கள் சூழ்ந்தாலும் அவைகள் ஒருபோதும் இயேசுவோடு நாம் வைத்திருக்கும் அன்பிலிருந்து எம்மை பிரிக்கமுடியாது என்பதை இவரது வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது.

புனித தோமையார் இயேசுவோடு இருந்து அவரோடு வாழ்ந்தவர். உயிர்த்த ஆண்டவரைக் காண்பதற்கு தோமா போட்ட நிபந்தனையால் அவரை "சந்தேகப் பேர்வழி" என்றே இன்றுவரை உலகம் அழைக்கிறது. ஆனால் அவர் "நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்" என்று விசுவாச அறிக்கை வெளியிட்டதுபோல் வேறுயாரும் அவ்வளவு மனம்விட்டு அறிக்கையிடவில்லையே! இருவரது வாழ்விலும் துன்பமும் துயரமும் நிறைந்திருந்தாலும் அவர்கள் இறைவனை முழுமையாக நம்பியவர்கள் என்பது உண்மை.

துன்பம் துயரம், சோதனை வேதனை, கண்ணீர் கவலை நிறைந்ததுதான் கிறிஸ்தவர்களின் வாழ்வு. ஆனால் இவை தற்காலிகமானவை. எதுவும் நிரந்தரமல்ல என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நம்பிக்கை வாழ்வு என்பது சீரான பாதையில் செல்லும் சொகுசு வண்டி அல்ல. மாறாக அது கடல் அலைகளில் தத்தளிக்கும் கட்டுமரம். "அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகின்றது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள்" (1பேதுரு 1:7). சோதனைகளும் துன்பங்களும் சந்தேகங்களும் ஊடுருவாத நம்பிக்கை வாழ்வு ஒன்று இல்லை என்று தான் கூறவேண்டும். "என் அன்பார்ந்த மைந்தர் இவரே" (மத்.3:17) என்று இறைத்தந்தையைப் பூரிக்க வைத்த இயேசுவும் "என் இறைவா ... ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத்.27:46) என்று கதறிய நேரமும் இயேசுவின் வாழ்வில் இருந்ததை நாம் அறிவோம்.

எமது நாட்டில் ஏற்பட்ட தாக்குதலின் விளைவும் எமக்கு துன்பம் வேதனை, துயரம் போன்ற பலவற்றை ஏற்படுத்தியிருந்தாலும் நாம் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையை அது அழிக்கவில்லை. மாறாக அதிகப்படுத்தியது எனலாம். எமது வாழ்வில் ஏற்படும் கவலைகள், கஷ்டங்கள், சோதனைகள், வேதனைகளில் துவண்டு போகாமல் இறைவனை உறுதியாக பற்றிப்பிடிப்போம். தோமாவின் சந்தோகம் அவரை இயேசுவின் மீது அளவுக்கதிகமாக நம்பிக்கை கொள்ளச்செய்தது மட்டுமல்ல அந்நம்பிக்கையை எடுத்துரைக்கவும் செய்தது. அதேபோன்று நாமும் எம் வாழ்வை இறைவனுக்கு ஒப்புக்கொடுப்போம். அவரது பணியை எடுத்துரைப்போம்.

**இறையாசிருடன் ஆசிரியர்**

# மனிதத்தை மறந்த ஆன்மீகம் அர்த்தமற்றது!



கிறிஸ்தவர்களின் மறைநூலான பைபிளில், மத்தேயு நற்செய்தி நூலின் 25வது அதிகாரத்தில் இயேசு ஒரு சுவாரஸ்யமானக் காரியத்தைப்பற்றி விளக்குகிறார். உலக முடிவில், இறுதித் தீர்ப்பு நடைபெறும், அப்போது அரசராக வரும் இயேசு மக்கட் கூட்டத்தை இரு பிரிவுகளாகப் பிரிப்பார் நல்லவர்களை வலப்பக்கமும், தீயவர்களை இடப்பக்கமும் இருக்கச் செய்து, வலப்பக்கமுள்ளவர்களைப் பார்த்து "தந்தையின் ஆசி பெற்றவர்களே, நித்தியப் பேரின்பத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, விண்ணக வீட்டைக் காட்டுவார். "நான் பசியாய் இருந்தபோது உண்ணக் கொடுத்தீர்கள்... தாகமாய் இருந்தபோது குடிக்கக் கொடுத்தீர்கள்... சிறையிலிருந்தேன் என்னைக் காண வந்தீர்கள்" என்ற காரணத்திற்காக இந்த பேரின்பப் பரிசு என்பார். அப்போது அவர்கள் ஆண்டவரை நோக்கி, "இதை எல்லாம் எப்போது நாங்கள் உங்களுக்குச் செய்தோம்? நீர் எப்போது பசியாக இருந்தோ, தாகமாயிருந்தோ, ஆடையின்றியோ... சிறையிலோ இருக்கக் கண்டோம்?" என்று எதார்த்தமாய் கேட்கும்போது, அப்போது இயேசு, "மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு இதைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்று சொல்வார்.

தனது இடப்பக்கம் உள்ளவர்களைப் பார்த்து "நெறி கெட்டவர்களே! என்னை விட்டு அகன்று போங்கள்" என்றும், "அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள்" என்று சொல்லி சபிப்பார். அவர் சபிப்பதற்கு காரணம், அவர் பசியாய் இருந்தபோதும், தாகமாய் இருந்தபோதும், ஆடையின்றி இருந்தபோதும் உதவ அவர்கள் முன்வரவில்லை. சிறையிலிருந்தபோத சந்திக்க வரவில்லை. இப்படி அவர் சொல்லக் கேட்டவுடன், அதிர்ந்துபோன அவர்கள். "நீர் எப்போது இப்படி இருக்கக் கண்டு நாங்கள் உதவாமல் போனோம்?" என்று வேதனை கலந்த ஆச்சரியத்தோடு கேட்பார்கள். அதற்கு ஆண்டவர், "மிகச் சிறியவருள், ஒரு சகோதர சகோதரிக்கு நீங்கள் எந்த உதவியும் செய்யாதபோது நீங்கள் எனக்கே செய்யவில்லை?" என்று கடிந்துகொள்வார்.

ஆக, ஒரு கருத்து மிகத் தெளிவாகிறது. ஆண்டவரின் ஆசியைப் பெறுவதற்கும், சாபத்தைப் பெறுவதற்கும் அடிப்படை அம்சமாய் இருப்பது சின்னஞ்சிறிய சகோதர, சகோதரிகளுக்கு அவர்கள் உதவுகிறார்களா? இல்லையா? என்பதுதான். மனித வாழ்க்கையின் ஒரே இலட்சியம், இறைவன் தருகின்ற பேரின்பத்தில் பங்குபெறுவதுதான். பல மறைகளும், பலவிதமாய் இந்த பேரின்பத்தை வர்ணிக்கின்றன. மோட்சம் என்றும், சொர்க்கம் என்றும், முக்தி என்றும், பேரின்ப வீடு என்றும், நிர்வாணம் என்றும், தன்னையே மழுமையான அறிவதன் வாயிலாக இறைவனை முழுமையாக அறிதல் என்றும் பல விளக்கப் பெயர்கள் உள்ளன. இதனை அடைவதற்கு ஒவ்வொரு முறையும் வெவ்வேறு விதமான வழிகளைக் காட்டுகிறது. இயேசு காட்டுகின்ற வழி "பிறரன்பு வழி", பிறரை அன்பு செய்கின்றோமா, அந்த அன்பு வாழ்வின் அடிப்படையான "காரியங்களில் வெளிப்படுகிறதா?" என்று பார்க்கத்தான் அழைக்கிறது.

நமது மறுவுலக வாழ்வு. இந்த உலக வாழ்வைப் பொருத்துதான் அமைகிறது. மரணத்திற்கு பின் அமையப்போகிற வாழ்க்கை, மரணத்திற்கு முன் அமைகின்ற வாழ்க்கையைப் பொருத்துதான் அமைகிறது. இறப்பிற்கு பின் இறைவனின் பேரின்பத்தை அனுபவிக்கவேண்டும். அவரை முகமுகமாய் தரிசிக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், இறப்பிற்கு முன் நாம் எப்படி வாழ்கிறோம் என்று...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# உலகெங்கும்சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்

இயேசு தமது நற்செய்தி பணிக்காக தேர்ந்தெடுத்த பன்னிரு திருத்தூதர்களில் தோமா ஒருவர். தோமாவுக்கு இயேசுவின் மேல் தனிப்பற்று. இயேசு இலாசரை உயிர்ப்பிக்கச் செல்லும்போது மற்ற சீடர்கள் அவரது உயிருக்கு ஆபத்து என்று தடுத்த போது தோமா **நாமும் செல்வோம். இயேசுவோடு இறப்போம்"** என்றுக் கூறினார்.

இயேசு இறுதி இரவுணவு வேளையில், தாம் விண்ணகத்திற்கு செல்வது குறித்து மறைபொருளாக பேசிக்கொண்டிருந்தபோது, தோமா அவரிடம் '**ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?** என்று கேட்டார்.

தோமாவின் கேள்விக்கு விடையாகவே, **வழியும் உண்மையும் வாழ்வும் நானே** என்று இயேசு தம்மை வெளிப்படுத்தினார். இயேசு உயிர்த்துவிட்டார் என மற்ற சீடர்கள் சொன்னதை நம்ப மறுத்த தோமா, உயிர்த்த இயேசுவை நேரில் கண்டதும் **நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!** என்று இவர் கூறிய வார்த்தைகள் போன்ற விசுவாச அறிக்கை நற்செய்தியில் வேறெங்கும் காணப்படவில்லை.

உயிர்த்த இயேசு தம் சீடருக்குத் திபேரியக் கடல் அருகே தோன்றியபோது, பேதுரு, யோவானுடன் தோமாவும் இருந்தார். தோமா, ஆண்டவரின் விண்ணேற்பிற்குப் பிறகு **உலகெங்கும்சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்** என்ற ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இந்தியாவிற்கு வந்தார்.

கொடுங்கலூர் துறைமுகத்தை வந்தடைந்தார் தோமா. அரசனின் மகளுக்கு அற்புத சுகம் தந்தார். பல அற்புதங்கள் செய்து வேதத்தைப் போதித்தார். மலபாரில் வாழ்ந்து வந்த யூதர்கள் பலர் மனந்திரும்பினர். கொச்சின் பகுதியில் பெரிய யூத சமூகமே இருந்தது. மலபார் திருச்சபையின் மையமாகக் கொடுங்கலூர்சபை செயல்பட்டது. தோமா இந்தியாவில் தம் பயணத்தைத் தொடர்ந்தார்.

நாடெங்கும் சென்று நற்செய்தியை போதித்து அற்புத சுகமளித்து தீய ஆவிகளை விரட்டி வந்தார். இரண்டாம் முறையாக கேரளா வந்தார். ஒன்றரை ஆண்டுகளில் நம்பூதிரி குடும்பங்கள், பிராமண குடும்பங்கள் உள்பட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். தோமா ஏழு சபைகளை நிறுவினார். மலையத்தூர், பாலயூர், கூவக்கயல், கொத்தமங்களம், கொல்லம், நிரணம், நிலகெல், என்ற ஒவ்வொரு சபையிலும் ஆயர்கள் குருக்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தியக் கிழக்குப் பகுதியில் சோழமண்டலக் கடற்கரையிலும் மைலாப்பூரிலும் மறைபணியாற்றினார். பின் சைனா வரை சென்று நற்செய்தியைப் போதித்தார். மைலாப்பூருக்குத் திரும்பி வந்து மறைப்பணியாற்றினார். அரசன் மகாதேவனும் அவன் மக்களும் திருமுழுக்குப் பெற்று நற்செய்தியை ஏற்றுக்கொண்டனர். மைலாப்பூரில் முதல் கோவிலை தோமா கட்டினார். பொறாமை கொண்டவர்கள் தோமாவைக் கொல்ல தருணம் தேடினர்.

சின்னமலையில் கோவிலுடன் சேர்ந்த குகையில் ஒழிந்திருந்தார். கோவிலுக்குப் பின்புறம் தோமாவால் கற்பாறையில் செதுக்கப்பட்ட ஒரு சிலுவையடியில் திருப்பலி நிறைவேற்றி செபம், தியானம் செய்தார். சின்ன மலையின் மேலிருந்து போதித்தார். மக்கள் தாகத்தால் தவித்தபோது பாறையை தம் தடியால் தட்டி நீர் சுரக்கச் செய்தார். இந்த நீர்ச்சுனை இன்றும் இருக்கிறது. பின்னர் பெரிய மலை எனப்படும் தோமையார் மலைக்கு தோமா சென்று அங்கு அடிக்கடி மறைந்து செபம், தியானம் செய்வார். தாமே செதுக்கிய சிலுவையின் முன் செபத்தில் ஆழ்ந்திருந்தபோது ஒரு வேத விரோதி அவரை பின்புறமாக ஈட்டியால் குத்திக்கொன்றான். தோமா மறைசாட்சி இரத்தத்தோடு சிலுவையை அரவணைத்தவாறு உயிர் துறந்தார்.



நற்செய்தியாளர் லூக்காவால் வரையப்பட்ட அன்னை மரியாவின் திருப்படம் தோமாவால் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. அது தோமையார் மலை ஆலயத்தில் இன்றும் உள்ளது. தோமாவின் திருவுடல் மைலாப்பூரில் அவர் கட்டிய கோவிலில் அடக்கம் செய்யப்பட்டது. பிறகு புனிதர் திருவுடலின் பெரும்பகுதி மெசபத்தோமியாவில் உள்ள எதேசா நகருக்கு எடுத்து செல்லப்பட்டது. இறுதியில் இத்தாலிக்கு எடுத்துசெல்லப்பட்டு ஓர்டோனா நகரில் வணக்கம் செலுத்தப்பட்டு வருகிறது.

புனித தோமா மறை சாட்சியாக மரித்தார். அவரது கல்லறை கி. பி. 1522இல் போர்த்துக்கேயர்கள் சென்னை வந்தபோது கண்டு பிடித்திருக்கிறார்கள்.

## கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற குறுநாடக செயலமர்வு மற்றும் போட்டி - 2019

**தலைப்பு :**

**கிறிஸ்தவ நாடகக் கலையின் பாரம்பரியத்தையும், இரசனையையும் எமது எதிர்கால சந்ததியினர் பொருட்டு பேணிச்செல்லும் கருவிகளான இளைஞர் நாம்....**

அழகியற் கலையின் அத்தனை அம்சங்களையும், நீண்ட வரலாற்றையும் தன்னகத்தே கொண்ட, கிறிஸ்தவ கலைகளுள், மரபார்ந்த, மக்களால் அதிகம் வியந்து நயந்து போற்றத்தக்க கலையான நாடகக் கலையை மடிந்து போவதற்கு இடமளிக்காமல், எமது எதிர்கால சந்ததியினரின் நன்மையின் பொருட்டு, அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்குத் தேவையான, ஆக்கபூர்வமான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வதன் ஊடாக, இளைய தலைமுறையினருக்கு இக்கலை மட்டில் உள்ள ஆர்வத்தைத் தூண்டும் நோக்குடன் இம்முறை குறு நாடக செயலமர்வொன்றினை நடாத்துவதற்கு, கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

இச்செயலமர்வானது இரண்டு நாள் வதிவிட செயலமர்வாக அமைவதுடன், கிறிஸ்தவ நாடகக்கலை தொடர்பில் புலமையும் அனுபவமும் பெற்ற கலைஞர் குழாத்தினால் நடாத்தப்படவிருக்கின்றது

செயலமர்வின் முடிவில் போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். (நாடகப் போட்டிக்கு விண்ணப்பிக்க வேண்டுமாயின் ஆகக் குறைந்தது. தமது நாடகக் குழுவைச் சேர்ந்த ஒரு அங்கத்தவரேனும் இச்செயலமர்வில் பங்குபற்றியிருத்தல் கட்டாயமானதாகும். ஒரு நாடகக் குழுவில் அங்கத்துவம் பெறும் அங்கத்தவர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை 20 ஆகும். இதற்கு வயது கருத்திற் கொள்ளப்படமாட்டாது).

**செயலமர்விற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் :**

**கத்தோலிக்க அல்லது தேசிய கிறிஸ்தவ சபையின் ஒரு இணை சபையாக இருத்தல்.**

- ☺ 2019 ஆடி 31ஆந் திகதியில் 15 வயதை அடைந்திருத்தல் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல். (2004.07.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்திருத்தல்)
- ☺ தனியாகவோ குழுவாகவோ விண்ணப்பிக்கலாம். (ஒரு குழுவில் உள்ள ஆகக்கூடிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10 ஆகும்)
- ☺ ஒரு விண்ணப்பதாரி ஒரு மொழியில் மட்டுமே பங்குபற்றலாம்.
- ☺ ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்புதல் கூடாது.

விண்ணப்பப் படிவங்களை கீழே காட்டியுள்ள விலாசத்திற்கு, 2019 ஆடி மாதம் 31ம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு, பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேடியாக எம்மிடம் ஒப்படைக்கவோ முடியும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**பணிப்பாளர்**

**கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்,**
**155%10, காசல் வீதி, கொழும்பு – 08.**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறு நாடக செயலமர்வு எனக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு, கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
011-2665584

## திருப்பாலகன் இயேசுவைக் கையிலேந்தும் வரம் பெற்ற புனித அந்தோனியார்

பாதுவாவின் புனித அந்தோனியாரின் 788ம் வருடாந்த மரண ஞாபகார்த்த தினம் இம்மாதம் 13ஆம் திகதி பூர்த்தியானது. 1195.08.15 போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பனில் பிறந்த அவர் 1231-06-13ஆம் திகதி இத்தாலி நாட்டின் பாதுவாவில் மரணமடைந்தார். புதுமைகள் ஏராளமாக இடம்பெறுவதற்கு புனித அந்தோனியார் காரணமாயிருந்தபடியால் 9ஆம் திகதி கிரகெரி பாப்பரசர் அவரை மிக விரைவாக 1232-05-30 புனிதராகப் பிரகடனப்படுத்தினார். அவர் தொடர்பான புதுமைகள் பலவற்றை மக்கள் தற்போது அறிந்திருக்கிறார்கள். ஆனால் அவரை வருணிக்கும் படங்கள் மற்றும் திருச்சுரூபங்களை நமதாண்டவராகிய இயேசு பாலகனைக் கையிலேந்திய வண்ணம் காண்பிக்கப்படுவது ஏன் என்பதை அறிந்தவர்கள் சிலர். அதன் விபரம் பின்வருமாறு திசோ என்னும் இத்தாலி பிராந்திய அரசாங்க தலைவரொருவர் புனித அந்தோனியாரின் காத்திரமான பிரசங்கங்களின் காரணமாக உலக முறைகளிலிருந்து மனந்திருந்தியிருந்தார். இதன் காரணமாக திசோ அந்தோனியார் உட்பட்ட பிரான்சிஸ்கன் துறவியருடன் அன்பாக இருந்தார். அந்தோனியாருக்கென ஒரு மர அறையையும் கட்டி நன்கொடையாக துறவியர் குழாமுக்கு வழங்கியிருந்தார். அந்தோனியார் இறந்த வருடமாகிய 1231ஆம் ஆண்டில் அவரின் மரணத்துக்கு முன் ஒரு நாள் திசோ அவ்வறையின் அருகாமையில் பயணித்துக்கொண்டிருந்தார். திசோ அந்தோனியாருக்குத் தாம் நன்கொடையாக வழங்கியிருந்த அறையின் பக்கம் கண்களைத் திருப்பினார். மாபெரும் வெளிச்சமொன்று அந்தோனியாரின் அறையிலிருந்து வந்து கொண்டிருந்தது. திசோ அந்தோனியாரின் அறை தீக்கரையாகிக்கொண்டிருக்கிறதென நினைத்து ஆத்திரப்பட்டு தீயை அணைக்க அவ்வறையினுள் தீவிரமாக உட்புகுந்தார். மாபெரும் வெளிச்சத்தின் மத்தியில் அந்தோனியார் பரவச நிலையில் நமதாண்டவராகிய இயேசு பாலகனைத் தம் கரங்களில் ஏந்திக்கொண்ட வண்ணம் காணப்பட்டார். அந்தோனியார் தம் கரங்களால் நமதாண்டவராகிய இயேசு பாலகனைத் தம் கரங்களில் ஏந்தும் ஆசீரைப்பெறுவதற்குக் கூட அருகதையான அளவுக்கு நமதாண்டவரை நேசித்தார்.


# நவீன போதைகள்.



போதைகள் பலவிதம், அதில் உங்கள் போதை எந்த விதமானது? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்? ஆம் வாழ்க்கையில் பலவிதமான போதைகள் இருக்கிறதா?



> பலரை வெளியில் ஒரு வாழ்க்கை, இண்டர்நெட்டில் இன்னொரு வாழ்க்கை என்று இரட்டை வேட வாழ்க்கையை வாழ வைக்கிறது.



என்று பட்டியலிட முடியாது. இன்றைய கால கட்டத்தில் எவை எல்லாம் போதைகள் என கண்டுபிடிக்கவே தெரியாமல் இருக்கின்றது. எந்த விதமான போதையாக இருந்தாலும், சாதாரண சிறிய பழக்கமாக தொடங்கி-விட மீண்டும் மீண்டும் செய்யத் தூண்டி மீளமுடியாத தொடர் செயலாகவும், அவஸ்தையாகவும் மாறிவிடு-கிறது. இது பிற்காலத்தில் நம்மையும் நம்மை சுற்றி வாழ்பவர்களையும், துன்பத்திலும், துயரத்திலும் ஆழ்த்தி விடுகிறது. இன்றைய நவீன உலகில், நாம் பார்ப்பது, தலையாய போதையாக இளைய சமுதாயத்தை பிடித்திருப்பது இணையத்தள பாதை.

ஒரு சிலருக்கு காலைச் செபமே whatsapp செய்திகள் தான். பகலில் நொறுக்குத் தீனி தின்பது போலவும், அவ்வப்போது கடிகாரத்தில் மணி பார்ப்பது போல அலைபேசியை எடுத்து எடுத்துப் பார்ப்பதும், எதிர்பார்க்கும் செய்தி வரவில்லை என்றால், நகத்தினைக் கடித்துக் கடித்துத் துப்புவதும், உலகத்தினையே மறந்து, கண்களை மூடி உரையாடுவதும், இதன் விளைவாக பல நேரங்களில் விபத்தினை ஏற்படுத்துவதும் இன்றைய நவ நாகரீக உலகின் அலைபேசி போதையின் அட்டகாசமான பின் விளைவுகள். காலை கண் விழிப்பது முதல்



இரவில் கண் அயர்வது வரை, விடாமல் இண்டர்நெட்டில் புழங்கிக் கொண்டே இருக்கும் போதை, பலரை வெளியில் ஒரு வாழ்க்கை, இண்டர்நெட்டில் இன்னொரு வாழ்க்கை என்று இரட்டை வேட வாழ்க்கையை வாழ வைக்கிறது. இதனால் பலர் நிஜ வாழ்க்கையை எதிர்கொள்ள இயலாமல், ஒருவிதப் போலி வாழ்வு மற்றும் போலிப் பிம்பங்களுடன், போதை நிறைந்து, பொய் வாழ்வு வாழப் பழகுகிறார்கள். உண்மை தெரியும் நாளில், இந்தப் பிம்பங்கள் உடையும்போது, மனச்சிதறல் நோய் ஏற்பட்டு, பலர் தற்கொலைகூடச் செய்து கொள்கிறார்கள்.

அருகில் இருக்கும் சக மனிதர்களோடு நட்புக் கொள்ளத் தெரியாத இவர்களுக்கு, ஆயிரம் கல் தொலைவில் இருக்கும் ஒரு ஆள் நண்பராக இருப்பார். முகம் தெரியாத மனிதர்களோடு நட்பாகி, பணத்தையும், மன நிம்மதியையும் இழந்தவர்கள் இன்று பெருகி வருகிறார்கள். இன்றைய இளம் வயதினர், சிலருக்கு சமூக வலைத்தளங்களில் எந்தத் தகவலைப் பகிர வேண்டும், எந்தத் தகவலைப் பகிரக்கூடாது என்ற ஒரு சாதாரண பகுத்தறியும் திறன்கூட இல்லாமல் போவது வேதனை.

Selfie போதை இன்று நம் இளைஞர்கள், இளம் பெண்களை தடுமாற வைக்கும் மற்றொரு நவீனப் போதை. இந்த ஆண்டு வைகாசி மாதம் முதல் வாரத்தில், ஒடிசா மாநிலத்தில் நபாரன்பூர் என்ற...

தொடர்ச்சி 15ம் பக்கம்..




# முரண்பாடுகள்

சென்ற இதழின் தொடர்ச்சி



## முரண்பாடுகள்

முரண்பாடுகளுக்குள் இவ்வளவு நன்மைகள் மறைந்துள்ளன. இவற்றைக் கண்டறிந்தபின் எப்படி அவற்றை முரண்பாடுகள் என அழைப்பது? அவைகளை வேறுவிதமாகவே பார்க்க கடமைப்பட்டுள்ளோம்.

விவிலியத்தில் நிறைய எதிர்மறைகள் தோன்றுகின்றன. இவை அனைத்தையும் தோற்றத்திலே முரண்பாடுகள் என அழைப்பர். அவற்றிற்கு விளக்கம் அளித்து முரண்பாடுகள் தெரியா வண்ணம் செய்வர் அறிஞர்கள். எனவே எவற்றையும் முரண்பாடுகள் என ஒதுக்கிவிட முடியாது. பல தீமைகளைச் சுட்டிக்காட்டுவார்.

பகுதி அறிவை முழுமையுடன் பொருத்தினால் முரண்பாடாகத் தெரியாது. பார்வை அற்றவர் ஐவர் யானையைப் பார்த்தார்கள். ஒருவர் காலை, மற்றவர் காதை யானை என உறுதிப்படப் பேசினர். ஆயினும் ஐவரின் கூற்றுக்களும் ஒன்று சேர்ந்தாலே முழுமையான யானையைத் தெரிந்துகொள்ள முடியும். ஒருவர் பகுதி உண்மையையும் மற்றவர் இன்னொரு பகுதி உண்மையையும் பற்றி நிற்பதாலே உலகில் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

## பொருள்

தோற்ற அளவிலே எதிர்மறையாகத் தோன்றும் கூற்றுக்களின் பொருள் என்னவெனக் கண்டறிய வேண்டும். மனித வாழ்விலே வழக்கிலே உள்ள பேச்சுக்கள், வாழ்க்கை முறைகள், நடைமுறைகள், முரண்பாடுகளை வாழ்வியல் உண்மைகளாக ஏற்றுக்-கொள்கின்றனர்.

### அ. தனிப் பாணி

தனி மனித வழக்கியல் முரண்பாடுகள். ஒருவரிடம், நீங்கள் உண்மையை ஒத்துக்கொள்ள மாட்டீர்கள் என்றால், நான் அப்படிப்பட்டவரிடம் ஓர் உண்மையைச் சுட்டிக்காட்டினால் உடனே மறுத்து-விடுவார். நீங்கள் குறட்டை விடுவீர்கள் என்று சொன்னவுடன் கிடையவே கிடையாது என்பார். ஆனால் இரவு தூங்கும் போது சரளமாகக் குறட்டைவிடுவார்.

### ஆ. சமூகப் பாணி

மருமகன் மாமனார் வீட்டுக்குச் சென்றிருப்பார். சாப்பிடுங்கள் என்றால், நான் இப்பொழுதுதான் சாப்பிட்-டேன் என்பார். உண்மையில் அவர் சாப்பிடவில்லை. சாப்பாடு கொடுத்ததும் நிறைய நன்றாகச் சாப்பிடுவார். ஆனால், கேட்டவுடனே, சாப்பிடவில்லை, கொடுங்கள், சாப்பிடுகிறேன் என்று சொல்வது வழக்கல்ல.

### இ. மொழி

முரண்பாடு ஒரு மொழி. பத்திரிகைகளிலே குறிப்பட்ட கட்சித் தலைவர் ஒருவர் தேர்தலிலே நிற்க-மாட்டார் என முதல் நாளில் செய்திவரும். பிறகு வேறு கூட்டணியில் சேராது என்பர். மறுநாள் சேர்ந்துவிட்டது என்பர். மறுப்பு உண்மையை உறுதிப்படுத்தும் என்பர்.

### ஈ. சிந்தனை முறை

முரண்பாடுகள் தான் சிந்தனை வழிமுறை. எல்லோரும் நல்லவர் என்பது பொதுவான கூற்று. ஆனால் அதிலே சிலர் கெட்டவர் என்பது உள்ளடங்கிய உண்மை எனவும் வாதிடுவர். எல்லாரும் கெட்டுப் போனார் என்ற அறிக்கையிலும் சிலர் கெடாமல் நல்ல-வராக நீடிக்கிறார்கள் என்பதும் உண்மை. எனவே முரண்பாடுகள் ஒரு சிறந்த சிந்தனை முறையாகும்.

### உ. நட்பின் தேவை

நட்புறவிற்கு இன்றியமையாதது முரண்பாடுகள். வள்ளுவரே இதை விளக்குகிறார். “நகுதற் பொருட்டன்று நட்பு மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு”. எப்பொழும் பாராட்டிக் கொண்டிருப்பவன் நண்பனல்ல. குற்றம் கண்ட இடத்தில் சுட்டிக்காட்டித் திருத்துபவனே சிறந்த நண்பன். ஆகவே, முரண்பாடுகளின் அவசியம் புரிகிறது.

### ஊ. நிர்வாகத் தேவை

சிறந்த நிர்வாகத்திற்கும் முரண்பாடுகள் தேவை. “இடிப்பாரே இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரே இலானும் கெடும்” மன்னன் சொல்வதற்கெல்லாம் “ஆம்” என்பது சிறந்த நிர்வாகமல்ல. மாறுபட்ட கருத்துக்களை உண்மையான கருத்துக்களைச் சொல்லி மன்னனை நல்ல நிர்வாகத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும். அடிக்கடி மதிப்பீடுகள் செய்து சீர்திருத்தங்கள் செய்ய-வேண்டும். அதுவே சிறந்த நிர்வாகமாகும்.

### எ. உறவுக்குத் தேவை

பெற்றோர் பிள்ளைகள் சகோதர சகோதரிகள் உறவுக்கும் முரண்பாடுகள் தேவை. மேலே குறிப்பட்டது போல ஒருவர் உண்மையின் ஒரு பகுதியையும் மற்றவர் உண்மையின் மறுபகுதியையும் வைத்திருக்கின்றனர். எனவே தான் வாயிலிலே ஒருவர் எழுதி வைத்திருந்தார். “நான் எப்பொழுதும் இரு தரப்பையும் பார்க்கின்றேன். அப்பொழுதுதான் முரண்பாடுகள் அகல்கின்றன உறவு தொடர்கிறது” என விளக்கமளித்தார்.

### ஏ. பக்திக்கும் தேவை

கடவுள் நல்லவரா? நல்லவராக இருந்தால் இரு உலகப் போர்களை எப்படி விளக்குவது? கடவுள் போருக்குக் காரணமல்ல. மனிதன் தான் மனிதனைக் கொல்லத் திட்டமிட்டான். அதன் விளைவுதான் போர். கடவுள் இதைச் சகித்துக் கொண்டார். ஆனால் இரு உலகப் போர்களுக்கும் பின்தான் மனிதன் கடவுளை அதிகமாகத் தேடினான். எனவே போர் கடவுளுக்குத் தேவை அல்ல. மனிதன் கடவுளைச் சிந்திப்பதற்கும் அவர்மீது பக்தி கொண்டிருப்பதற்கும் அவைகள் தேவையாய் இருந்திருக்கின்றன.

# உத்தரியம்

## ஒரு விண்ணக கொடை!



**கார்மேல் மலை மாதா**
**உத்தரிய திருவிழா ஆடி 16**

செபமாலையும், உத்தரியமும் அன்னை அருளிய அருட்சாதனங்கள். உத்தரியம் திருச்சபையின் பொக்கிஷம். ஒரு விண்ணகக் கொடை.

1. திருப்பலியில் பங்கேற்பது.
2. செபமாலை செபிப்பது
3. உத்தரியம் அணிவது
4. சிலுவைப் பாதை

இவை நான்கும் விண்ணகத்தின் திறவு-கோல்கள்.

### உத்தரியம்

1. இது மீட்பின் சிறப்பு அடையாளம்.
2. இதனை அணிந்துகொண்டு இறப்பவர்கள் நித்திய நெருப்பலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.
3. இது ஆபத்திலிருந்து காக்கும் கேடயம்
4. அமைதி மற்றும் பாதுகாப்புக்கென சிறப்பாக வழங்கப்படும் உறுதி.
5. திருத்தந்தை 12ம் பயஸ் "உத்தரியம் மரியாவின் மாசற்ற இருதயத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்பதன் அடையாளம்" என்று கூறியிருக்கின்றார்.
6. மேலும் இது இயேசுவின் எளிய நுகத்தைக் குறிப்ப-தோடு "அதைச் சுமப்பதற்கு உதவி என்றும் உமக்கு உண்டு" எனவும் நினைப்பூட்டுகிறது.
7. உத்தரியம் அணிந்துள்ள நம்மை மரியாவின் அழைப்புப் பெற்ற பிள்ளைகளாக்குகின்றது.
8. நமக்கு அருட்கொடைகளின் அணிகலனுமாகத் திகழ்கிறது.
9. மேலும் மரியாவின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிப்பின் அடையாளமாக இருக்க அதை அணிந்துகொள்ளுமாறு அன்னை மரியா பாத்திமா காட்சி தரிசனத்தின்போது கேட்டுக் கொண்டார்.
10. நம் உடம்பில் படும்படியாக இதனை அணியவேண்டும். அப்போதுதான் அன்னையின் உடனிருப்பை நாம் உணர முடியும்.
11. கத்தோலிக்கர் அல்லாதவர்கூட உத்தரியத்தை அணியலாம். அதன் வழியாக அவர் பல அருட்கொ-டைகளை மாதாவிடம் பெறலாம்.
12. உத்தரியத்தை அணிவதன் வழியாக அன்னை மரியின் விசேட பாதுகாப்பை நாம் நாடி நிற்-கின்றோம். அவரும் நம்மை பாதுகாப்பார், வழிநட-த்துவார். இயேசுவின் அருகில் நம்மை அழைத்துச் செல்வார்.
13. இது காக்கிறவரின் அடையாளமாகவும், ஆபத்து சமயத்தில் கேடயமாகவும், என்னுடைய உதவியின் ஆரம்பமாகவும் இருக்கிறது" என்று அன்னை மரி கூறியுள்ளார்.

மேலும் கி.பி 1301ஆம் ஆண்டு உத்தரிய மாதா, திருத்தந்தை 22ஆம் அருளப்பருக்குத் தோன்றி, "உத்தரிய சபையினர் மரித்து உத்தரிக்கிற ஸ்தலத்திற்குப் போயிருந்தால் கூடிய விரைவில் நான் அவர்களை மீட்டுக் கொள்வேன்" என்றார். மேலும் "மரணத்திற்குப் பின்வரும் முதல் சனிக்கிழமைகளில் அவர்கள் அவ்விடத்திலிருந்து விடுதலையாவார்கள்" எனவும் மொழிந்துள்ளார்.

கார்மேல் மாதாவின் இத்தகு பேருதவிகளை கார்மேல் சபையினர் மட்டுமல்ல, அவரது உத்தரியத்தை அணியும் அனைவரும் பெறுவார்கள். உத்தரியத்திற்குப் பதிலாக உத்தரிய சுரூபத்தையும் அணியலாம். இந்தப் பக்தியானது. நாம் மோட்ச இராக்கினியின் ஞானப்பிள்ளைகளாக வாழ்வதற்கு உதவிபுரியும்.

கி.பி 13ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கார்மேல் துறவற சபைக்கு அதிபராய் இருந்த புனித சைமன் ஸ்டாக் என்பவருக்கு 1251ஆம் ஆண்டு ஆடி மாதம் 16ம் நாள் கேம்பிரிட்ஜ் நகரில் அன்னை மரியாள் காட்சியளித்து இந்த உத்தரியத்தை வழங்கியுள்ளார். அப்போது "எனது அருமை மகளே, இந்த உத்தரியம் உங்கள் சபைக்கு உரியது. இதை உனக்காகவும், கார்மேல் சபை சிறார்க்காகவும் நான் பெற்றது" என்று கூறியுள்ளார்.

எபிரேய மொழியில் கார்மேல் என்ற சொல்லுக்கு "தோட்டம்" என்பது பொருள். பலஸ்தீன நாட்டில், ஹைபா வளைகுடாவில், 1500 அடி உயரத்திலிருக்கும் தோட்டத்தில்தான் கார்மேல் சபையின் முதல் உறுப்பினர்கள் வனவாசிகளாக வாழ்ந்துள்ளனர். தங்களின் துறவு இல்லத்துக்கு அருகில், ஒரு கோவிலை மரியாளின் பெயரில் கடவுளுக்குக் கட்டினர். அக்கால வழக்கப்படி கோவில் இருந்த கார்மேல் என்னும் இடத்தின் பெயராலேயே மரியாவுக்கு "கார்மேல் அன்னை" என்னும் பெயர் வழங்கலாயிற்று. இந்த இடம்தான் நமது பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் எலியா தங்கி தன் செபத்தில் நாட்களைக் கழித்தார் என வாசிக்கின்றோம். "எலியா கார்மேல் மலையின் உச்சிக்கு ஏறிச் சென்று, அங்கே தரையில் மண்டியிட்டுத் தம் முழங்கால்களுக்கு இடையே முகத்தைப் புதைத்துக் கொண்டார்" (1 அர 18:41-46).



1251ஆம் ஆண்டு ஆடி 16இல் அன்னை மரியா புனித சைமன் ஸ்டாக்கிற்குக் காட்சியளித்து உத்தரியம் கொடுக்கும்போது "உத்தரியம் அணிபவர்களுக்கு நரகம் கிடையாது" என்று வாக்களித்துள்ளார். அதாவது உத்தரியத்தை அணிந்தால் சாத்தானுக்கும், நமக்கும் உள்ள உறவு துண்டிக்கப்படுகிறது. இங்ஙனம் நம்மை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற எத்தனையோ சலுகைகளை இறைவன் அன்னை மரியின் மூலம் நமக்குத் தருகிறார். ஆனால், நாம்தான் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. காரணம், இது அணிவதற்கு அழகாக இருக்காது. தங்க நகைகள் அணியும்போது இடையூறாக இருக்கும் என்று சொல்லி உத்தரியம் அணிவதைத் தவிர்க்கின்றோம். ஆனால் ஒரு பத்து ரூபாய் பொருளில் நமக்கும் நரகம் இல்லை. மீட்பு உண்டு என்பது எப்பேர்ப்பட்ட சலுகை! அதை அணியாமல் விடலாமா?

கிறிஸ்தவர்கள் இந்த உத்தரியத்தைக் கழுத்தில் அணிந்திருந்தால் மட்டும் போதாது. மாறாக, நல்ல கிறிஸ்தவர்களாக வாழவேண்டும். நமது செயல்கள் கிறிஸ்துவின் கொள்கைகளைப் பிரதிபலிக்க வேண்டும். நம் வாழ்வில் அன்பு ஆணிவேராக இருக்கவேண்டும். இறையன்பு இல்லாத பிறரன்பும், பிறரன்பு இல்லாத இறையன்பும் மீட்பிற்கு உதவாது.

எனவே, நாம் இந்தப் பரிசுத்த உத்தரியத்தை அணிந்து தீயோனிடமிருந்து நம்மைக் காத்துக் கொள்வோம். புனித மரியாளைப் பின்பற்றி அவரைப் போல் பரிசுத்தமாய் வாழ்ந்து, நாம் அவர்களுக்குச் சொந்தமானவர்கள் என்று வெளிப்படையாக வாழ்ந்து காட்டுவது பெரும் பாக்கியமாகும்.

## "கார்மேல் மலையின் அழகிய மலரே, கார்மேல் சபையின் காவலியே"

உத்தரிய மாதாவே, உலகோர்க்கு இரட்சணியமே!
உமது சக்திக்கு நிகரற்றவர் வேறு யாருமில்லை!
உமது திருக்குமாரனிடம் உருக்கமுடன் வேண்டுமம்மா
உமது அன்பிற்கு நிகர் வேறுயேது மில்லையம்மா

புனித அன்னையே மீட்பரின் தாயே பேருபகாரியே
புண்ணியங்கள் நிரம்பப் பெற்ற புனித வதியே தாயே
புவியில் வாழும் உம் பிள்ளைகளை
துணைநந்து காப்பீரே
புவிமீட்டு புரட்சியிலிருந்து எம்மை காப்பாற்றும் தாயே!

தேவநற்கருணையின் பேழையே தினமும்
எமக்காய் வேண்டுவீரே
தேவன் தந்த திருக்கொடையே
திருவருள் பொழிந்து காத்தருள்வீரே
தேவ வரப்பிரசாதம் நிறைந்த சுகிர்த அலங்காரியே
தேவ கருபையை தினந்தோறும் எமக்கு
பெற்றுத்தாருமே!

ஓ மாதாவே ஒளிர்மிகு விருந்துச் சின்னமே!
ஓ அன்னையே உம் பிள்ளைகள் நாமல்லவோ!
ஓடோடி வந்தோம் அம்மா, சகாயம் தந்து காப்பீரே!
ஓ சென்மபாவமில்லாமல் உற்பவித்த இராக்கினியே
கார்மேல் தாயே!

கார்மேல் சபையின் கனிவான தாயே அம்மா
காரிருள் எம்மை கவ்வும்போது கனிவுடன் காத்தருளும்
காருண்ணியம் காசினியில் பரவிட கண்ணின்
மணிபோல் காத்தருளும்
காக்கும் உம் கரங்களால் காலமெல்லாம் எம்மை
காத்தருளும் தாயே

தாயிலும் மேலான தாய் மரியே அன்னையே!
தாழ்ப்பணிந்தோம் தயவுடன் வழிநடத்துமம்மா
தாற்பரியங்கள் தாழ்ச்சியுடன் வளர வரம் தாருமம்மா
தாசர்கள் நாம் உம் பாதத்தண்டை
மண்டியிட்டோமம்மா

இராக்கினியே அம்மா ஏழைகளின் தஞ்சமே தாயே
இன்னல்கள் இடைஞ்சலிலிருந்து
மீட்டருளும் எம்மையே
இதயத்தின் ஆழத்திலிருந்து துயருடன்
உம்மை அழைத்தோம் அம்மா
இல்லையென்று இயம்பாது எம்மவர்க்காய்
வேண்டியருளும்

சகல புண்ணியங்களும் நிரப்பப்பெற்ற
உத்தம மாதிரிகையே
சகல நன்மை வரப்பிரசாதங்களின் ஊற்றே

சரமாரியாக பொழிந்தருளும் உம் கருணையை
சத்தியம், சகோதரத்துவம், சமத்துவம் தளைக்க
தயை கூருமம்மா

மாசற்ற கன்னிகையே மாதாவே கார்மேல் தாயே
மாசில்லா மாமரியே மனுமக்களின் பேருபகாரியே
மாண்புடன் மக்கள் வாழ வழி வகுப்பீரே அம்மா -
துர் மார்க்கங்களிலிருந்தும் சகல தப்பறைகளிலிருந்து
காத்தருளும் தாயே

சென்மபாவமில்லாமல் உற்பவித்த மாசற்ற தாயே!
செப, தப, தான, தருமங்களில் வளர்ந்திட
வழிநடத்துமம்மா - செங்கதிரோனன்
உத்தரியமாக அணிந்த பேரின்ப சௌந்தரியே -
செல்லுமிடமெல்லாம் உம் புகழ் ஓங்க செயற்பட
வரமருளும் தாயே!

வந்தோம் தாயே! உம்மைந்தர்கள்
கார்மேல் சபையினர்
வந்தனைகள் புரிந்து வாழ்த்தினோம் எம் அன்னையை
வடிவலங்காரியே தேவமகனின் அன்னையே - உம்
வரங்களை வாரி வழங்கி எம் கார்மேல் சபையை
வழிநடத்தும் தாயே!

**அருட்சகோ. டெலாறோஸ். அ.கா**



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பொதுக்காலத்தின் 14வது ஞாயிறு (07.07.2019)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 14வது ஞாயிறு தின திருவழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் திருக்குலமே! கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும், திருத்தூதர்களை அடிக்கல்லாகவும், இறைமக்களைக் கட்டிடக் கல்லாகவும் கொண்டு அமைந்ததுதான் நமது திருஅவை. ஆனால் இன்று உண்மையான ஊழியர்கள் இல்லாமல் ஆட்டம் கண்டுள்ள நிலை ஒருபுறம், நமது பிரிந்த சகோதரர்கள் மறுபுறம் அரசியல் அமைப்புக்கள் நமக்கெதிராக செயல்படும் நிலை, வேலையின்மை, பொருளாதாரத் தட்டுப்பாடு, வசதியின்மை, கல்வியற்ற நிலை ஒருபுறம் கேள்விக்குறியாக்கும் நிலை, மறுபுறம் இந்த நிலையில்தான் இயேசு திருத்தூதர்களை பணிவாழ்வுக்கு இருவர் இருவராக அனுப்பியபோது கூறிய அறிவுரைகள் எமது சிந்தனைக்காக கொடுக்கப்பட்டுள்ளன. திருமுழுக்கினால் திருப்பணிக்கு அழைக்கப்பட்டுள்ள நாமும் கடவுள் மீது முழு நம்பிக்கையும் வைத்து எதுவித எதிர்பார்ப்பும் இல்லாமல் எமது அழைப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக...

**முதல் வாசகம் : எசாயா 66:10-14**
ஆறுபோல் பாய்ந்தோடச் செய்வேன்.

**பதிலுரைப் பாடல் :**
அனைத்துலகோரே கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.

**இரண்டாம் வாசகம் : கலா 6:14-18**
என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுக்கு அடிமை என்பதற்கு அடையாளம்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா அல்லேலூயா கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுள் நிறைவாகக் குடிகொள்வதாக அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 10:12,17-20**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்து இயேசுவை மூலைக்கல்லாக கொண்டு உலகின் நாலாபக்கமும் இருந்துவரும் எதிர்ப்புக்களையும் சவால்களையும் எதிர்கொண்டு என்றும் நிலைத்து நிற்கும் திருஅவையை வழி. நடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் உறுதியோடும், துணிவோடும் என்றும் உழைத்திட வரமருள வேண்டுமென்று...

எமது நாட்டைச் சூழ்ந்துள்ள இன்னல்கள் யாவும் தூர விலகவும், அரசியல் ஆதாயத்திற்காக மக்களை பகடைக் காய்களாக பயன்படுத்தும் இழிநிலை மாறவும் தலைவர்களும் அதிகாரிகளும் மக்களுக்கு மனச்சான்றின் குரலுக்கு ஏற்ப உண்மையின் தூதர்களாகச் செயல்படவும் வரமருள வேண்டுமென்று...

கடவுளின் வார்த்தையை சுமந்து வரும் பணியாளர்களைப் புறக்கணிக்காமல் திறந்த மனதோடு ஏற்றுக்கொள்ளவும், பகையுள்ள இடத்தில் அன்பையும் வெறுப்புள்ள இடத்தில் மன்னிப்பையும் வழங்கி கிறிஸ்தவ மதிப்பீடுகளில் நிலைத்து நாம் வாழவும் திருத்தூதர்களைப் போல் இயேசுவின் சாட்சிகளாக நாம் மாறவும் வரமருள வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 15வது ஞாயிறு (14.07.2019)**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 15வது வாரத்தை தொடங்கும் நமக்கு இன்றைய திருவழிபாடும் வாசகங்களும் இறையன்பிலும், பிறரன்பிலும் வளர, வாழ அழைப்பு விடுக்கின்றன. இறையன்பின்றிப் பிறரன்பு இல்லை. நற்செய்தியில் இறைமகன் இயேசு அயலான் அல்லது அடுத்திருப்பவர் யார் என்பதையும் அவர்களை அன்பு செய்ய வேண்டுமென்று நல்ல சமாரியன் உவமையில் கூறுகிறார். இறையன்பு மற்றும் பிறரன்பு இவை இரண்டும் மதிப்பு மிகுந்த நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. அன்புசெய்யக் கற்றுக்கொள்ள அதற்கு செலவு செய்யத்தேவையில்லை, ஆனால் அந்த அன்பு நமக்குக் கொடுக்கும் பலன்களுக்கு அளவே இல்லை. இன்றைய நற்செய்தியில் வரும் சமாரியன் தன் உயிரையே பணயம் வைத்து உதவிசெய்கின்றான். இன்றைய சமூகச் சூழலில் நாம் நல்ல சமாரியனாக மாறுவது எப்போது? சிந்தித்துச் செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : இ.ச 30:10-14**
நீ அதை நிறைவேற்றுமாறு வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது.

**பதிலுரைப் பாடல் :**
கடவுளை நாடித் தேடுவோரே, உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக.

**இரண்டாம் வாசகம் : கொலோ 1:15-20**
அனைத்தும் அவர் வழியாக அவருக்காகப் படைக்கப்பட்டன.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவரே உம் வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன. நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன. அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 10:25-37**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நிலைவாழ்வு பெற வேண்டுமானால் உனது அயலானை அன்பு செய் என்ற படிப்பினையை தன் மக்களுக்கு வழங்கி வழிநடத்தும் திருஅவையையும் அதன் பணியாளர்களையும் ஆசீர்வதிக்கவும், அவர்கள் என்றும் இறையன்பையும், பிறர் அன்பையும் போதித்து அனைத்து மக்களையும் நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்ல என்றும் உறுதியுடன் உழைக்கும் ஆர்வத்தைத் தந்தருள வேண்டுமென்று...

பணம், பட்டம், பதவி, அதிகாரம், சட்டம், சொத்து என எதுவும் பலன்தராது அன்பு ஒன்றே அனைத்தையும் தரும் என்பதை புரிந்துகொண்டு ஒருவரை ஒருவர் அன்பு செய்து மனிதமாண்பை பேணி வளர்ப்பதில் அக்கறை கொண்டவர்களாக, அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் மக்களும் செயல்பட வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

உனது வாழ்வில் மாற்றம் காண, சமுதாயத்தில் ஏற்றம் காண அன்பு செய், முழு மனதுடன் அன்பு செய், நீ கடவுளையே அன்பு செய்பவனாக உயர்த்தப்படுவாய். இதை உணர்ந்தவர்களாக கடவுளின் அன்புக் கட்டளையை அனுசரித்து வாழவும், மனித மாண்பின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளவும் வரமருள வேண்டுமென்று...

# ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 07

## அமைதியை தேடி அடைதல் வேண்டும், வளர்ச்சி பெறப் பேரவா வேண்டும்.

- பிறரது சொல்லும், செயலும் நம்மைப் பாதிக்காதவரை அதில் தலையிடாதிருந்தால் நாம் மிகுந்த அமைதியாய் இருக்கமுடியும்.
- பிறருடைய அலுவலில் தன்னைச் சிக்கவைக்கிறவனும், புறத்துச் சூழ்நிலைகளைத் தேடுகிறவனும், தன்னைப்பற்றி குறைவாக, அல்லது அரிதாகச் சிந்திப்பவனும் எப்படி நெடுநாள் அமைதியில் நிலைக்க இயலும்?
- தூய மனத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் மிகுந்த அமைதியைக் காண்பர்.
- புனிதரில் சிலர் நிறைபண்பாளராகவும், காட்சிச் சிந்தனையில் ஆழ்ந்தவராகவும் திகழ்ந்ததன் காரணம் என்ன?
- அவர்கள் மண்ணக ஆசைகளில் பற்றற்றவராய்த் தங்களை முற்றும் ஒறுக்கக் கற்றிருந்தார்கள். இதனால், தங்கள் இதயத்தின் முழு ஆற்றலுடன் இறைவனோடு ஒன்றுபடவும், சுதந்திரமாக அவரில் ஓய்வு கொள்ளவும் முடிந்தது.
- நாம் நமது சொந்த ஆசைகளிலேயே அளவுகடந்த கவனம்செலுத்துகிறோம், நிலையற்றவைகளிலேயே மிஞ்சிய கவலை கொள்ளுகிறோம்.
- ஒரு தீய குணத்தைக்கூட நாம் அறவே வெற்றி கொள்வது அரிது. அன்றாட வளர்ச்சியிலும் நாம் தனியார்வம் கொள்ளாதிருக்கிறோம். இதனாலேயே மரத்த, சலித்த நிலையில் தங்கிவிடுகிறோம்.
- நாம் நமக்கே முற்றும் இறந்தவர்களாய், உள்ளத்தில் பற்றற்றவர்களாய் இருப்போமாயின், இறைவனைச் சார்ந்தவற்றைச் சுவைக்க முடியும். விண்ணகக் காட்சிச் சிந்தனையைச் சிறிது அனுபவிக்க முடியும்.
- நம் தீய உணர்ச்சிகளிலிருந்தும், உடல் நாட்டங்களிலிருந்தும் விடுதலை பெற்றுப் புனிதர்களின் நிறைவான தூய வாழ்வில் புகுவதற்கு முயலாதிருப்பதே, நமது நல்வாழ்வுக்குப் பெருந்தடை, ஒரே தடை.
- சிறிய எதிர்ப்பு ஒன்று ஏற்படும்போதும் நாம் எளிதில் மனம் உடைந்து மனித ஆற்றலை நாடிச் செல்கிறோம்.
- ஆனால், வீரர்களைப்போன்று போர் தொடுக்கத் துணிந்தால், உடனே இறைவனின் கரம் விண்ணின்று நம்மீது இறங்குவதைக் காண்போம்.
- ஏனென்றால், அவர் போர் செய்கிறவர்களுக்கும், தம்முடைய அருளில் உறுதி கொள்கிறவர்களுக்கும் உதவி புரியத் தயாராக இருக்கிறார். நாம் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகத்தான் போர் தொடுக்க நமக்கு வாய்ப்பு வழங்குகிறார்.
- நம் ஆன்ம வளர்ச்சி வெளிச் சடங்குகளோடு நின்றுவிட்டால், நமது பக்திக்கு விரைவில் முடிவு வந்துவிடும்.
- எனவே, உணர்ச்சிகளிலிருந்து தூய்மைபெற்று அமைதியான மனத்தை அடைவதற்கு நாம் வேரிலே கோடரியைப் போடவேண்டும்.
- ஆண்டு ஒன்றிற்கு ஒரு குற்றத்தைப் பிடுங்கி எறிந்தாலும் விரைவில் நிறை மனிதராகத் திகழ முடியும்.
- மாறாக துறவு வாழ்வில் பல்லாண்டுகள் கழிந்த பின்னரும், மனமாற்றத்தின் தொடக்கத்தில் அல்லவா அதிக நல்லவர்களாகவும், தூயவர்களாகவும் இருந்ததாக நாம் இப்போது உணர்கின்றோம்.
- நம்மில் ஆர்வமும், வளர்ச்சியும் நாள்தோறும் பெருகி வரவேண்டும். ஆனால், முதலில் ஒருவருக்கிருந்த ஆர்வத்தில் பகுதியாவது இன்னும் காத்துவர முடிந்ததென்றால், அதுகூடப் பெரிதாகக் கருதப்படுகிறது.
- முதலில் நம்மைச் சிறிது ஒடுக்கினோமென்றால், பிறகு எல்லாவற்றையும் எளிதாகவும், மகிழ்ச்சியாகவும் செய்துவிடலாம்.
- பழக்கத்தை விட்டுவிடுவது கடினம். ஆனால், தன் விருப்பத்திற்கு எதிராகச் செயல்படுவது அதைவிடக் கடினம்.
- நீ சிறிய, எளிதான செயல்களில் வெற்றி பெறவில்லையென்றால், கடினமானவைகளை எப்படி மேற்கொள்வாய்?
- உனது நாட்டத்தைத் தொடக்கத்தில் எதிர்த்து நில். தீய பழக்கங்களை மறந்துவிடு. இல்லையென்றால், அ∴து ஒருவேளை சிறிது சிறிதாக உன்னை மிகக் கடினமான சூழ்நிலைக்கு இழுத்துச் சென்றுவிடும்.
- ஓ! நீ நல்லவனாக இருப்பதால் உனக்கு எவ்வளவு அமைதி பிறக்கும், எவ்வளவு மகிழ்ச்சி கிட்டும் என்பதை அறிந்திருந்தால், நீ ஆன்ம வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பாய் என எண்ணுகிறேன்.

தொடரும்

# பணிவிடை பெறுவதற்கு அன்று பணிவிடை புரியவே இயேசுவின் வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்தவர்க உயர்மறைமாவட்டத் துறவிகள்

கடந்த பாஸ்கு ஞாயிறு உலகையே சோகத்தில் ஆழ்த்திய தற்கொலைத் தாக்குதலினால் உயிரிழந்த 350க்கும் மேற்பட்ட இறைமக்களில், காயமடைந்து வைத்தியசாலைகளிலும், தம்தம் இல்லங்களிலும் தாக்குதலின் கோரத்தினால் வேதனைப்பட்டும் பரிதவிக்கும் எம் உடன் பிறவாச் சகோதர சகோதரிகளின் துயர் துடைப்பிற்கு, ஆறுதலாக, பக்க பலமாக தம் உடன் இருப்பை, பணிவிடையை, அன்றைய தினம் தொடக்கம் இன்றுவரை ஆற்றிவரும் கொழும்பு உயர் மறைமாவட்ட துறவற ஆணைக்குழு அங்கத்தவர்களின் பணியை நினைத்துப் பெருமிதம் அடைவதோடு அவர்களுக்கு இறையாசீர் தொடர்ந்தும் கிடைக்க இறைவனை வேண்டுவோம்.

எம்மவரின் உள்ளங்களில் ஆறாத் துயரையும், மறக்க முடியாத கோர நினைவுகளையும், அழிக்க முடியாத வடுக்களையும் ஏற்படுத்திய இத்தாக்குதல் நடைபெற்ற தினம் தொடக்கம், மரித்தவர்களின் உடலடக்கம் நடைபெற்ற தினம் வரை, உடல் அவயங்களை அகற்றுவதிலும், ஆலயங்களைத் துப்பரவு செய்வதிலும், மரித்தவர்களின் இல்லங்களைத் தரிசித்து வேதனையில், சோகத்திலும் எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் எதிர்காலம் ஒன்று இல்லை என்று இறைவனைக் குறைசொல்லிய உறவுகளின் சோகத்தில் பங்கெடுத்து தமது உடனிருப்பைச் செயலில் காட்டி நம்பிக்கையின் ஒளிக்கீற்றை மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்தி, தனிமையிலே, வைத்தியசாலைகளிலே, சொல்லொணாத் துயரை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் ஆறுதலாக செயற்பட்ட இத்துறவிகள் இயேசுவின் வார்த்தைக்கு 'பணிவிடை வெறுவதற்கு அன்று பணிவிடை புரியவே வந்தேன்" அர்த்தம் கொடுத்தவர்கள் என்றால் அது மிகையாகாது. கொழும்பு கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தலத்திலும், நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய தூய செபஸ்தியார் ஆலயத்திலும் உயிர்த்த இயேசுவின் திருநாள் திருப்பலியில் பங்கெடுத்த இறை மக்கள் குடும்பமாக, குடும்ப அங்கத்தவர்களின் ஒரு சிலர் உடல்சிதைக்கப்பட்டு மரித்து, காயமடைந்தும் இருந்த வேளையில் வைத்திய சாலைகளுக்கு உடனே சென்று தம்மால் ஆன பங்களிப்பைச் செய்து தேவைப்பட்ட வேளையில் தேவைப்பட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி ஆறுதலாக இருந்தவர்கள் இத்துறவிகள். விசேட விதமாக நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிப் பங்கில் இறந்தவர்களின் குடும்பங்களைத் தரிசித்து, வழிபாடுகளை ஒவ்வொரு இல்லத்திலும் நடாத்தி ஆறுதல் கூறிய வேளையில்தான் சிலர் தமது ஆழ்ந்த நினைவுகளின் சோகத்தில் இருந்து மீண்டனர். இந்த இழப்பை ஏற்றுக்கொண்டவர் இறைவனின் திட்டத்தைப் புரிந்து கொண்டனர். இக்காலப் பகுதியில் இல்லங்களையும், வைத்தியசாலைகளையும் தரிசித்த துறவிகள் சிலர் எம்மோடு உரையாடிய வேளை தமது பணி அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர். சில இடங்களில் வீடுகளைத் தரிசிக்கச் சென்ற வேளையில் பௌத்த மதக்குருக்கள் கூட இவர்களோடு வழிபாடுகளில் இணைந்து கொண்டது மட்டுமல்லாமல் ஆலயங்களைத் துப்பரவு செய்யும் பணியில் கூட இணைந்து கொண்டமை தமக்கு ஆச்சரியத்தைத் தந்ததாகக் குறிப்பிட்டனர். அவர்களை சாதாரண நிலைக்கு கொண்டு வருவது என்பது இலேசான காரியமல்ல, இருப்பினும் இறையருளால் அதிலும் கூட வெற்றியடைந்துள்ளனர் எனலாம். மரித்த சிலரின் உடலை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் மக்கள் பரிதவித்த வேளையில் அவர்களோடு இருந்து அடையாளம் காண உதவியவர்களும் இவர்களேயாவர். நேர காலம்பாராது, காலத்தின் தேவையை உணர்ந்து செயற்பட்டனர் இத்துறவியர். இறைவனுடைய எண்ணங்களும், செயல்களும் மனித எண்ணங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் முற்றிலும் வித்தியாசமானது என்பதற்கு இத்தற்கொலைத் தாக்குதல் எடுத்துக்காட்டாகும். ஆனால் இறைவனுடைய எண்ணங்ளையும் திட்டங்களையும் புரிந்து கொள்ளாத இறைமக்களுக்கு இத்தருணத்தில் விளக்கிக்கூறி மக்களின் உள்ளங்களை அமைதிப்படுத்தியவர்களும், இத்துறவிகளே ஆவர். அத்தோடு இன்றுவரை ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டவர்களை பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களைத் தரிசித்து ஆற்றுப்படுத்தி வருவதும் இவர்களது பணியாகக் காணப்படுகின்றது. தேவைப்பட்டவர்களுக்கும் தேவைப்படுகின்றவர்களுக்கும் தனியார், சமூக நிறுவனங்களில் சிறப்பாக கொழும்பு உயர்மறைமாவட்ட கரித்தாஸ் நிறுவனமாகிய 'செத்சரண' மூலம் நிதியுதவிகளையும் பொருள் உதவிகளையும் வழங்கி வருவதும் பாராட்டுக்குரியது. எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது கொழும்பு உயர் மறைமாவட்ட துறவிகள் ஆணைக்குழு அங்கத்தவர்கள் தாம் பிரதிபலிக்கும் துறவற சபைகளின் ஊடாக தனிப்பட்ட ரீதியில் இன, மத, மொழி, கடந்த தமது தூரநோக்குப் பார்வையின் மூலம் இனங்களுக்கிடையே, மதங்களுக்குடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முகமாகவும் சேவையாற்றிவருவது பாராட்டுக்குரியது. இப்பணியில் ஈடுபட்ட, தொடர்ந்தும் ஈடுபட்டுவரும் ஒவ்வொரு துறவியினதும் அனுபவம் வேறுபட்டதாக









மதங்களின் ஒ

# வந்தேன் என்ற
# ள் கொழும்பு



இருந்தாலும் வேறுபாட்டின்மூலம் ஒற்றுமையை நிலைநாட்டி வருகின்றனர் என்றால் அது மிகையாகாது. தொடர்ந்தும் அவர்களின் பணி எமது மறைமாவட்டத்தில் நிலைத்திட அர்ப்பண உள்ளம் கொண்ட இளையோர், தம்மை இப்பணிக்கு அர்ப்பணித்திட இறையாசீர் வேண்டுவோம்.

தொகுப்பு :
அருட்சகோதரர்
R. ஜோசப் ஜெயகாந்தன்.



## ஒருமைப்பாடு



# மருத்திருத்தலத்தின் ஆடி மாதத் திருவிழா




திருச்சபையில் மரியாளின் பக்தி முயற்சிகள் நிறையவே உள்ளன. இவையனைத்தும் மரியாளுக்குத் தேவை என்று தான் சொல்வதைவிட மக்களுக்குத் தேவை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு குழந்தையை கொஞ்சுவதோ, அதைக் கண்ணே, மணியே என்று அழைப்பதோ குழந்தைக்குத் தேவையில்லாவிட்டாலும் கொஞ்சும் தாய்க்கு அது தேவையே. தாய் தன் அன்பை வெளிப்படுத்தச் சில வார்த்தைகளையும், சில செயல்களையும் உபயோகித்துத்தான் ஆக வேண்டும். மரியன்னையின் உயர் நிலையை அறிந்தவர்கள், அவள் இயேசுவின் மீட்புப் பணியில் பங்கேற்றதை ஏற்கிறவர்கள், அவளது உதவியைப் பெற்றவர்கள், அவளை அன்பு செய்யாமல் இருக்க முடியாது. இந்த அன்பின் பிரதிபலிப்புத்தான் எம் ‘மருதமடு மாதா என்றால் மிகையாகாது.

16ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் தென்கரை ஓரங்களில் வசித்த புதுக்கிறிஸ்தவர்கள், தங்கள் விசுவாசத்தை இலங்கைத் தீவின் கடற்கரை ஓரங்களில் விதைத்தார்கள். இலங்கை கரையோரங்களில் வசித்த மக்கள் இந்தியாவில் பணிபுரிந்த பிரான்சிஸ் சவேரியாருக்கு, இலங்கை வந்து வேதம்போதிக்கும்படி கேட்டுக் கொண்டதன் பேரில், அவர் தன்னுடைய பெயரைக்கொண்ட ஒரு குருவை அனுப்பி கரையோரங்களிலுள்ள மக்களுக்கு வேதம் போதித்தார். அறுநூறுக்கும் அதிகமான ஆண்களும் பெண்களும் சத்தியவேதத்தை தழுவியதோடு மட்டுமல்ல, அவர்களில் அதிகபற்றானோர் சங்கிலி அரசன் காலத்தில் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்திற்கு தமது இரத்தத்தினால் முத்திரையிட்டார்கள் என்று சரித்திரம் கூறுகின்றது. இந்த வேத கலாபனையினால் புதிதாக விதைக்கப்பட்ட சத்திய வேதம் அழியவில்லை.

அவ்வேளையில் மன்னாரிலிருந்து ஆறு மைல்களுக்கப்பால் இருக்கும் மாந்தை என்ற கிராமத்தின் ஆலயமும் முக்கிய ஆலயங்களுள் ஒன்றாக திகழ்ந்தது. இந்த மாந்தை ஆலயத்தில்தான் செபமாலை மாதாவென்று அந்நாட்களில் அறியப்பட்டு மடு மாதா சுரூபத்தின் ஆதி இருப்பிடம் அமைந்திருந்தது. இதைத் தொடர்ந்து ஒல்லாந்தருடைய ஆட்சியில்தான் கத்தோலிக்கருக்கெதிரான கொடுரமான வேத கலாபனை ஆரம்பித்தது. இந்த கலாபனைகளின்று தங்களைப் பாதுகாக்கும் பொருட்டும் செபமாலை மாதாவின் சுரூபத்தை பாதுகாக்கும் பொருட்டும் குருக்களின் துணையில்லாத அந்த வேளையிலும் இருபது பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் சுரூபத்தை தூக்கிக்கொண்டு அடர்ந்த வன்னிக்காட்டில் அங்கும் இங்கும் திரிந்து இறுதியாக அமைதியான அடர்ந்த மருதமடு காட்டுப்பிரதேசத்திற்கு மடு அன்னையின் வழிநடத்தலில் எவ்வித ஆபத்துமின்றி வந்து சேர்ந்தார்கள். பல பாகங்களிலும் வேதகலாபனை தொடர்ந்த வேளையிலும் மாந்தை கத்தோலிக்கர்கள் முதல்முறையாக மடுப்பிரதேசத்தில் திருச்சபையை நிலைநாட்டி வேத வித்தை விதைத்தனர் என்று வரலாறு கூறுகிறது. விதைத்த விசுவாசம் இன்றுவரை தளர்ந்து போகவில்லை. எத்தனை கலாபனைகள் போர்கள் நடந்தாலும் அன்னையின் மீது வைத்த விசுவாசமும் நம்பிக்கையும் பக்தியும் மடு திருத்தளத்தில் வரும் மக்களின் தொகையைக் கொண்டே நாம் காணலாம்.

இவ்வாறாக வருடத்தில் ஒவ்வொரு மாதமும் மாதாவிற்கு திருவிழா எடுக்கப்படுகிறது. இத்திருவிழா ஆடி மாதம் 2ஆம் திகதியும், ஆவணி 15ம் திகதியும் சிறப்பு விழாக்கள் கொண்டாடப்படுகிறது.

கடந்த 2ஆம் திகதி ஆடி மாதம் மருதமடு அன்னையின் திருவிழா சில பகுதிகள்...












கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை பார்த்து அதன் சம்பவத்தை பெட்டிக்குள் எழுதுங்கள்.













# புது நன்மை நாள்



மாமன்னர் நெப்போலியன் ஒரு நாள் தனது போர் தளபதிகளோடு பேசிக்கொண்டிருந்தார். அப்போது ஒருவர் 'எனது வாழ்க்கையில் மிக மகிழ்ச்சியான நாள் **மரங்கோ யுத்தத்தில் வெற்றி பெற்ற நாள்** என்றார்.

ஆஸ்பர்விட்ஸ் களத்தில் வெற்றி பெற்ற தினமே என் வாழ்க்கையிலே மகிழ்ச்சியான நாள் என்றார். இன்னொருவர் இவ்வாறே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெற்றி தினங்களை குறிப்பிட்டு அவர்களது மகிழ்ச்சியான நாட்களாக கூறினர்.

இறுதியாக பல வெற்றிகளை கண்ட மாமன்னர் நெப்போலியன் தனது மகிழ்ச்சியான நாள் எது வென்று கூறினார்...?

**புது நன்மை எடுத்த நாள் தான் என் வாழ்க்கையில் மகிழ்ச்சியான நாள் என்று முக மலரக் கூறினார்.**

**ஆம் இயேசு நம்மோடு இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நாளும் நமக்கு மகிழ்ச்சியே என்பதை மறக்கக்கூடாது**

# ஒளி



**மரணப் படுக்கையில் கௌதம புத்தர்**

**அவரைச் சுற்றி கண்ணீருடன் சீடர்கள்**

"நீரே எம் ஒளி.
உம் ஒளியில்தான் நாங்கள் இதுவரை நடந்து வந்தோம்.
நீர் இல்லாத வாழ்வு எங்களுக்கு இனி இருட்டுதான்.
இருளில் நாங்கள் வழி தடுமாறுவோமே...!
எங்கள் கதி என்ன ஆவது?
வழி சொல்லுங்கள் குருவே..!"

**சீடர்களிடம் புத்தர் சொன்ன இறுதி வார்த்தைகள்:**
"இருட்டு என்று கலங்காதீர்கள்
நீங்களே விளக்காக மாறுங்கள்...!"

**காரிருளைப் பழிப்பதை விட சிறு திரியை ஏற்றுவதே மேல்**

# தெரிந்து கொள்ளுங்கள்



## புனித தோமா
## ஆடி – 3

**தோமா என்பது ஒரு கிரேக்கப் பெயர். அதற்கு அர்த்தம் இரட்டையன். இயேசுவின் 12 சீடர்களில் தோமாவும் ஒருவர்**

- இவர் இயேசுவின் சீடராக மாறும்போது வயது 29
- இவர் திருமணமானவர்.
- தச்சுத் தொழிலாளியாகவும், பிறகு மீனவராகவும் இருந்தார்.
- இவர் எதையும் ஆராய்ந்து பார்க்கும் திறன் கொண்டவர்
- இயேசு 12 அப்போஸ்தலர்களுக்கும் ஒவ்வொரு பொறுப்பைக் கொடுத்திருந்தார். அதில் தோமாவின் பொறுப்பாக இருந்தது. இயேசு, மற்றும் 12 அப்போஸ்தலர்களுக்கும் நற்செய்தி போதிப்பதற்கு இடம், ஊர், காலம், நேரம், போன்றவற்றை வடிவமைத்துக்கொடுக்கும் பொறுப்பு அவரிடம் இருந்தது.
- தோமா நேர்மையான சந்தேக தைரியசாலி

**தோமாவின் சின்னங்கள்**

தோமாவின் சின்னங்களாக புத்தகம், மற்றும் ஈட்டி ஆகிவை கருதப்படுகின்றன. புத்தகம் நற்செய்தி போதித்தார் என்பதையும், ஈட்டி அவர் இயேசுவிற்காக மறைசாட்சியானதையும் நினைவுப்படுத்துகின்றது.

**பாதுகாவலர்**

புனித தோமா இந்தியா, இலங்கை, பாக்கிஸ்தான் ஆகிய நாடுகளின் பாதுகாவலராக கருதப்படுகின்றார்.

- கண் பார்வையற்றோர்
- கட்டிடம் கட்டுவோர்
- கல் உடைப்போர் ஆகியோரின் பாதுகாவலராகவும் இருக்கிறார்.

**இவருக்கு இந்தியாவின் அப்போஸ்தலர் என்ற சிறப்பு பெயரும் உண்டு**





# விவிலியம் அறிவோம்

## விவிலியம் வாசிக்க...

## விவிலியப் பகுதி

### மாற்கு நற்செய்தி
### 03ஆம் 04ஆம் அதிகாரங்கள்

46. பேய்களை எப்படி ஓட்டுகிறார் என்று மக்கள் இயேசுவை குறித்து சொன்னார்கள்?
47. இயேசு மக்களை தம்மிடம் வரவழைத்து எதன் வாயிலாக பேசினார்?
48. தனக்கெதிராய் தானே பிளவுப்படும் எந்தக் காரியங்கள் நிலைத்து நிற்க முடியாது?
49. எக்காலத்திலும் மன்னிப்பு பெறாதவர் யார்?
50. வெளியே நின்று கொண்டு இயேசுவை தேடினவர்கள் யார்?
51. இயேசுவை சூழ்ந்து அமர்ந்திருந்தவர்கள் யார்?
52. இயேசு தமதுசகோதரர்களும் சகோதரிகளும் ஆவர் என யாரை குறிப்பிடுகிறார்?
53. விதைப்பவர் ஒருவர் விதைத்த சில விதைகள் வழியோரம் விழுந்ததை எது விழுங்கியது?
54. மிகுதியாக மண் இல்லாப் பகுதிகளில் விழுந்த சில விதைகள் எதனால் காய்ந்து கருகிப்போயின?
55. முட்செடிகளிடையே விழுந்து வளர்ந்த விதைகள் எவற்றை கொடுக்கவில்லை?

15ம் பக்கம்

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

**மேலே கட்டங்களில் தரப்பட்டுள்ள நிகழ்வுகளை எழுதி இம்மாதம் 12ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அனுப்புங்கள்.**

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 பேர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

ஆடி 7ம் திகதி ஞான ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுவர் பகுதியில் படங்களைப் பார்த்து சரியாக எழுதிய சிறுவர்களுக்கு

**எமது பாராட்டுக்கள்.**

1. அனாயா, தரம் 3, நல்லாயன் கன்னியர்மடம், கொழும்பு 13.
2. மக்ஸ்மிலன், தரம் 1, புனித அந்தோனியார் கல்லூரி, கொழும்பு 13.
3. ஜ. ஏட்றியன் ஜவன், தரம் 4, புனித பேதுரு கல்லூரி, கொழும்பு 4.
4. பிரியானா, தரம் 3, நல்லாயன் கன்னியர்மடம், கொழும்பு 13.
5. மத்தியு, தரம் 5, வத்தளை

மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்




சூரியனைப் போலவே
இருக்கவேண்டும் என்று
பிடிவாதம் பிடிப்பதில்லை
நிலா, தன்னிடம்
ஒளியேதும் இல்லை
என்றாலும் வருகின்ற
ஒளியை வழியனுப்பும்
நிலாவுக்கும் இல்லாமலா
போகிறது. ஓர் அழகு?
மயில் போல்
இல்லாவிட்டாலும்
இருக்கின்ற இறகை
வைத்துப் பறக்கும்
கழுகின் கம்பீரம்
வேறு எதற்கு வரும்?
கவிஞர்
பாடவில்லை
என்றாலும், பெண்கள்
தலையில் சூடவில்லை
என்றாலும்
தெய்வங்களின்
தோளில் ஏறவில்லை
என்றாலும் வண்டுகள்
அதிகம் தேடுவது
கள்ளிப்
பூக்களைத்தான்
கவனித்துப்பார்!
மூங்கில்
மரங்களை யாரும்
வீட்டின் முன்
வைப்பதில்லை
மெனக்கெட்டு
தண்ணீர்
ஊற்றுவதில்லை.
அழகு மரமென்று
ஆராதிப்பதில்லை.
கனிகள் இல்லாததால்
எச்சமிடக் கூட
எப்பறவையும்
வருவதில்லை.
எளிதில் பற்றி விடும்
என்று தோப்புகளில்
வைப்பதில்லை.
ஒன்றைக்
கழித்து எடுப்பதற்குள்
உயிர்மூச்சு
நின்றுவிடும்
உடலெல்லாம்
காயமாகும்.
இருப்பினும்
புனிதமான இம்மரத்தால்
தரமுடியும் ஒரு
புல்லாங் குழலை?
நடுங்காதே
நண்பா நீ
தனித்தன்மை
கொண்டவன்.
யோசித்துப்பார்
கழுகின் கம்பீரம்
நிலவின் குளுமை
மூங்கிலின் இசை
யாருக்கு வரும்?
யோசித்துப் பார்!
உன் கையின்
ரேகை போல் உலகில்
யாருக்குண்டு?
உன்
முகம்போல் உலகில்
யாருக்குண்டு?
உன் குரல்
போல் உலகில்
யாருக்குண்டு?

# நடுங்காதே நண்பா! நீ தனித்தன்மை கொண்டவன்

க.பொ.த உயர்தரம் எழுதும் மாணவர்களுக்கு

# இதோ தேர்வு பாடங்கள் சில





நன்றாகப் படித்து, தேர்வு எழுதி நிறைய மதிப்பெண்களைப் பெறுவது இந்த போட்டி யுகத்தின் கட்டாயத் தேவையுமாயிருக்கிறது. இதைப்பற்றி கவலைப்படாத மாணவர்களும் இல்லை. ஆசிரியர்களும் இல்லை. ஏன் பெற்றோர்களும் இல்லை, இப்படியாக தேர்வு எழுதும் முன்பே மாணவர்களும் சரி, ஆசிரியர்களும் சரி, பெற்றோரும் குழப்பநிலையில் இருப்பதை நாம் கண்டு இருக்கிறோம். ஒரு பதற்றம் அவர்களிடையே காணப்படுகிறது.

ஒவ்வொரு மாணவனும் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இருக்கும்போது தேர்வை நோக்கியே பயணிக்கின்றார்கள். தேர்வு நெருங்க ஒருவகை அச்சம் கவ்விக் கொள்கிறது. ஆண்டு முழுவதும் கவனமாக படித்தாலும் இந்த தேர்வு அச்சம் அனைவருக்கும் எழுவது இயல்பே. தேர்வு ஒரு வகைப் போட்டிதான். போட்டியில் தோற்றுவிடகூடாது என்ற திகைப்பும், அதிக மதிப்பெண் வாங்க வேண்டும் என்ற பயமும், எப்படியாவது பரீட்சையில் தேறிட வேண்டும் என்ற நினைப்புமே தேர்வு அச்சத்துக்கு காரணமாகிறது. இந்த அச்சம் தேவையற்றது. பயனற்றது. இந்த பயமும் அச்சமும் உண்மையில் நமது இயல்பான செயல் திறனையும் குறைத்துவிடும்.

## பதற்றமின்றிப் புறப்படுவோம்.

தேர்வுக்கு முன்னால் பதற்றமும், பயமும் ஏன் வருகிறது? அதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வது எப்படி? தேர்வுக்குச் செல்லுமுன் நாம் என்னென்ன செய்ய வேண்டும்? தேர்வை நோக்கித்தான் நாம் பாடசாலையிலும், கல்லூரியிலும் பயணிக்கின்றோம். ஆனாலும் தேர்வு நெருங்க நெருங்க நம்மை ஒரு வகை அச்சம் கவ்விக் கொள்கிறது. ஆண்டு முழுவதும் கவனமாகப் படிக்கும்
மாணவர்களும் கூட இந்தத் தேர்வுக் காய்ச்சலுக்குத் தப்புவதில்லை.

## தேர்வு அச்சம் ஏன் வருகிறது?

தேர்வும் ஒரு வகைப் போட்டிதான். எந்தப் போட்டியிலும் நாம் தோற்றுவிடக் கூடாது என்று ஒவ்வொருவரும் நினைக்கின்றோம். இதுதான் தேர்வு அச்சத்துக்கு அடிப்படை காரணம். நன்றாகப் படித்தவன் அதிக மதிப்பெண் வாங்க வேண்டுமே என்று பயப்படுகிறான். நன்றாகப் படிக்காதவன் தேறிவிட வேண்டுமே என்று பயப்படுகின்றான். ஆனால், உண்மையில் தேர்வு அச்சம் தேவையற்றது. பயனற்றது. அது மட்டுமல்ல, தேர்வு அச்சம் உண்மையில் நம்முடைய இயல்பான செயல் திறனையும் குறைத்துவிடும். பயமும், பதற்றமும் இருந்தால் நாம் ஆண்டு முழுமையும் படித்ததும், பயிற்சி செய்ததும் கூடப் பயனற்றுப் போகும். அபூர்வமாகச் சிலர் தேர்வுக்கே செல்ல முடியாமல் போகிறது. வேறு சிலர் தேர்வு எழுதும்போதே மயங்கி விழுகிறார்கள். உண்மையில் தேர்வு அச்சம் தேவையற்றது. நன்றாகப் படிக்கவில்லை என்றாலும் கவலைப்படத் தேவையில்லை. இப்போதெல்லாம் 80 சதவிகிதம் மாணவர்கள் தேறிவிடுகிறார்கள். ஆசிரியர்களும் எப்படியாவது மாணவன் தேறிவிட வேண்டும் என்கிற நோக்கில் தான் திருத்துகிறார்கள். எனவே, இன்றைய தேர்வுகளில் தோற்பதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவுதான். எனவே, எவ்வளவு படித்திருக்கிறோமோ அந்த அளவு வெற்றி வாய்ப்பு அதிகம் தான். எனவே, பதறாமல் அமைதியாகத் தேர்வுக்குப் புறப்படப் பழகிக்கொள்வோம்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தேர்வு நேரத்தில் கொஞ்சம் அமைதிப்படுத்த வேண்டும். அவர்களை உற்சாகப்படுத்திக் கவலைப்படாமல் தேர்வுக்கு அனுப்ப வேண்டும். சில பெற்றோர்களோ கடைசி நேரத்தில் “அதப் படிச்சியா? இதப் படிச்சியா?” என்று மாணவர்களைப் பதற வைக்கும் அவலங்களும் நடக்கின்றன. மாதிரித் தேர்வுகளும் ஆண்டு முழுவதும் நடக்கும் மற்ற தேர்வுகளையும் நன்றாக எழுதிப் பழகியிருந்தால், எந்த வகையில் கேள்விகள் அமையும் என்பதும் நமக்குத் தெரிந்திருக்கும். பயிற்சி கூடக் கூடப் பதற்றம் தணிந்துவிடும். இறுதித் தேர்வு என்பது நாம் ஆண்டு முழுவதும் மேற்கொண்ட தேர்வுப் பயணத்தின் நிறைவுதான். முன்கூட்டித் திட்டமிட்டுத் தேர்வைச் சந்திப்போம். அதற்கான சில முன் ஏற்பாடுகளை இங்கே பார்க்கலாம்.

## முந்திய நாள்

பெரும்பாலும் தேர்வுக்கு முந்தியநாளே புதிது புதிதாகப் படிப்பதை நிறுத்திவிட வேண்டும். எந்தக் கேள்வி வரும் என்று யூகிக்கிற வேலையையும் விட்டுவிட வேண்டும். நாம் புதிதாகப் படிப்பதை நிறுத்தினால் தான் நமது மூளை நமது இறுதி வரை படித்தவற்றை நினைவுக்குக் கொண்டுவர வசதியாக இருக்கும். முதல் நாள் நமது குறிப்புக்களைத் திரும்பிப் பார்க்கலாம். பெரிய வினாக்களுக்குரிய விடைகளின் முக்கியமான குறிப்புகளை நினைவுக்குக் கொண்டு வருவது நல்லது.

கணித சூத்திரங்கள், வேதித் சமன்பாடுகள், வரைபடங்கள் போன்றவற்றைத் திரும்பிப் பார்க்கலாம். மறுநாள் தேர்வுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பேனா, பென்சில் போன்றவற்றைத் தயாராக எடுத்து வைக்கலாம். தேர்வு மையத்துக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். தேர்வு நாளன்று பதற்றமில்லாமல் புறப்பட இது பயன்படும். கோயில் அருகில் இருந்தால் முதல் நாளே சென்று வரலாம். கடவுளின் துணையைக் கேட்கலாம். கடவுள் நம் முயற்சியின் வழியாகத் தான் நமக்கு உதவ முன்வருவார். கடவுளிடம் சொல்லிவிட்டேன் என்று நாம் படிக்காமல் இருப்பது சரியில்லை. அதனால் பயனும் இல்லை.

## முதல் நாள் இரவு.

பொதுவாகவே நடு இரவு வரை தூக்கத்தை விரட்ட முயற்சி செய்துகொண்டே படிப்பது தவறு. தேர்வுக்கு முந்தின இரவில் கண்டிப்பாக இப்படிச் செய்யக்கூடாது. ஆனால், பெரும்பாலான மாணவர்கள் இதைத்தான் செய்கிறார்கள். பெரும்பாலான பெற்றோர்களும் இதைச் செய்ய வேண்டும் என்றுதான் கட்டாயப்படுத்துகிறார்கள்.

நாம் ஓய்வாக இருக்கும்போதும், தூங்கும் போதும் மூளை வேலையே செய்வதில்லை என்று பலர் நினைக்கிறார்கள். முதல் நாள் தூக்கத்தைக் கெடுத்துக்கொள்ள இதுதான் காரணம். ஆனால், இந்த எண்ணம் தவறு. நாம் எந்த எண்ணத்தில் ஒன்றி இருக்கின்றோமோ, அந்த எண்ணம் தொடர்பான செய்திகளை மூளை நமக்கு வசதியாக மேலே கொண்டு வருகிறது. தேர்வுப் பாடங்களை நாம் அசைபோட்டால் போதும், மூளை தானாகவே அந்தப் பணியைத் தொடரும். நாம் கண்டிப்பாக ஏழு மணிநேரம் தூங்க முயலவேண்டும். அப்போது தான் காலையில் தேர்வுக்கு உடம்பும் தயாராக

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# இயேசுவின் முழு இருப்பின் தொகுப்பே திருநற்கருணை



தந்தையாம் இறைவனுக்கும் தன் சகோதரர், சகோகரிகளுக்கும் அன்புகாட்டும் இயேசுவின் முழு இருப்பின் தொகுப்பே திருநற்கருணை என, எடுத்துரை-த்தார், திருத்தந்தை பிரான்சிஸ். தனக்குத்தானே வாழ்தல் என்ற போக்கிலிருந்து மாறி, இறைவன் நமக்குக் கொடுத்துள்ள சிறியவற்றைக்கூட மற்றவர்களுடன் பகிர முன்வரும் மாற்றத்தையே, இயேசுவின், “அப்பம் பலுகுதல் புதுமை” எடுத்துரைக்கிறது என கூறினார் திருத்தந்தை.

இயேசுவின் மெசியாவுக்குரிய அதிகாரத்தை வெளிப்படுத்தும் இப்புதுமை, மக்கள் மீது அவர் கொண்டிருந்த கருணையையும் வெளிப்படுத்துவதாக உள்ளது என்று கூறிய அவர், தன் பாடுகளுக்கு முந்தைய நாள், தன் இறப்பு மற்றும் உயிர்ப்பின் நிலையான நினைவுச்சின்னமாக, புதிய, நீடித்த உடன்படிக்கையாக திருநற்கருணையை இயேசு விட்டுச்சென்றார் என மேலும் கூறினார். இயேசுவைத் தன்னுள் கொண்டிருக்கும் திருநற்கருணை எனும் உன்னத கொடை மீது நம் மகிழ்ச்சியை, ஒவ்வோர் ஆண்டும், இந்த திரு உடல் திரு இரத்த திருவிழாவின்போது புதுப்பிப்போம் என, மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# இளையோரே, திருஅவைக்கு நீங்கள் தேவைப்படுகின்றீர்கள்!



இளையோர் மாமன்றத் தந்தையர் மிகவும் விரும்பியது போன்று, மேய்ப்புப்பணியில் மனமாற்றம் கொண்டுவருவதில் இளையோர் முதன்மைக் கருவிக-ளாக உள்ளனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓர் இளையோர் குழுவிடம் கூறினார். பொதுநிலையினர், குடும்பம், மற்றும் வாழ்வு திருப்பீட அவை ஏற்பாடு செய்த 11வது உலகளாவிய இளை-யோர் கூட்டத்தில், 100க்கும் மேற்பட்ட நாடுகளி-லிருந்து கலந்துகொண்ட ஏறத்தாழ 350 பிரதிநிதிகளை, ஆனி 22, சனிக்கிழமையன்று, வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எம்மாவுஸ் சீடர்களின் அனுபவத்தை மையப்படுத்தி உரையாற்றினார். இயேசுவின் திருஉடல், திருஇரத்தப் பெருவிழா சமயத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுவது இறைபராமரிப்பு என்றே சொல்ல வேண்டும் எனவும், கிறிஸ்துவின் பிரசன்னத்தில் எம்மாவுஸ் சீடர்களின் வாழ்வு சுடர்விட்டது போன்று, இளையோரும், இன்று, இருளான இரவில், ஒளியாகத் திகழ அழைக்கப்-பட்டுள்ளனர் எனவும் திருத்தந்தை கூறினார். நாம் மற்றவரை எந்த அளவுக்கு ஆண்டவரிடம் கொண்டு வருகிறோமோ, அந்த அளவுக்கு, நம் வாழ்வில் அவரின் பிரசன்னத்தை உணர்வோம் என்றும், கடவுளின் இன்றையப் பொழுது நீங்களே, திருஅவை-யின் இன்றையப் பொழுதும் நீங்களே என்றும், திரு-அவைக்கு நீங்கள் தேவைப்படுகின்றீர்கள் என்றும், இளையோரிடம் கூறினார்,

**2022ல் லிஸ்பனில் உலக இளையோர் நாள்**

“மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்” (லூக்.1,39) என்ற தலைப்பில், 2022ம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டு லிஸ்பனில், உலக இளையோர் நாள் சிறப்பிக்கப்படும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறினார். பானமாவில் நடைபெற்ற உலக இளையோர் நாள் பற்றி நினைவுபடுத்திய திருத்தந்தை, அடுத்த உலக இளையோர் நாளுக்குத் தயாரிப்பாக, “இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு” (லூக்.7,14), “எழுந்து நிமிர்ந்து நில். நீ என்னைக் கண்டது பற்றி சான்று பகர வேண்டும்” (தி.பணி.26,16) ஆகிய இரு விவிலியப் பகுதிகளைத் தியானிக்குமாறு இளையோரைக் கேட்டுக்கொண்டார். லிஸ்பன் இளையோர் நாளுக்கும், இளையோர் பற்றிய உலக ஆயர் மாமன்றத்திற்குப்பின் தொடரும் பயணத்திற்கும் நல்ல தொடர்பு உள்ளது என்றுரைத்த திருத்தந்தை, 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளின் உலக இளையோர் நாள்களின் தயாரிப்புகளுக்கு, இந்த விவிலியப் பகுதிகள் உதவும் என்றும், இவை, 2022ம் ஆண்டின் லிஸ்பன் இளையோர் நாள் தலைப்புக்கு இட்டுச் செல்லும் என்றும் தெரிவித்தார். ஆண்டவர் உங்களுக்கென தயார் செய்துள்ள பாதைகளை, எழுந்து பின்தொடர உந்தித்தள்ளும் கடவுளின் குரலை அணைத்து விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை, அன்னை மரியாவைப் போன்று, அவரோடு ஒன்றித்து, உங்களின் அன்பையும் மகிழ்வையும் மற்றவர்க்கு ஒவ்வொரு நாளும் வழங்குங்கள் என்று, இளையோரிடம் கேட்டுக்கொண்டார்.

# ஆயர், தனது மந்தையை தோளில் சுமக்க வேண்டும்



வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றிய புனிதர்கள் பேதுரு, பவுல் பெருவிழா திருப்பலியில் ஆற்றிய மறையுரையில், பேராயர்கள் அணியும், பால்யம் என்ற கழுத்துப்பட்டையின் முக்கியத்-துவம் பற்றியும் விளக்கினார் ஆயர், தனது மந்தையை தோளில் சுமக்க வேண்டும் என்பதையும், ஆயர்கள், தங்களுக்காக வாழாமல், தனது மந்தைக்காக வாழ வேண்டும் என்பதையும், வாழ்வைப் பெறும்பொருட்டு, அதை இழக்க வேண்டும் என்பதையும், பால்யம் நினைவுறுத்துகின்றது என்று, திருத்தந்தை கூறினார்.

இத்திருப்பலியில், இந்தியாவின் நாக்பூர் பேரா-யர் ஜோசப் கொன்சால்வெஸ் அவர்கள் உட்பட, பல்-வேறு நாடுகளின் 31 பேராயர்களுக்கு பால்யங்களை அணிவித்தார், திருத்தந்தை பிரான்சிஸ். கடந்த ஆண்டில் பேராயர்களாக நியமனம் பெற்ற, இந்த 31 பேராயர்களில், நால்வர், மியான்மார், வியட்-நாம், இந்தோனேசியா, இந்தியா ஆகிய ஆசிய நாடுக-ளையும், ஒருவர். ஓசியானியாவையும், எட்டுப் பேர் ஆப்ரிக்காவையும் சேர்ந்தவர்கள்.

# வறியோர் உலக நாள் செய்தி தரும் சவால்கள்

வறியோருடன் செலவிடும் சில நிமிடங்கள், அவர்களை எண்ணிக்கைகளாகக் கண்ணோக்காமல், மனிதர்களாகக் கருதி, அவர்களுக்கு தரும் சிறு புன்னகை ஆகிய சிறு விடயங்கள் வறியோருக்கு நம்பிக்கையைக் கொணரும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளது, வறியோர் உலக நாளுக்கென இவ்வாண்டு அவர் உருவாக்கியுள்ள செய்தியின் ஒரு முக்கிய அம்சம் என்று திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கூறினார். இவ்வாண்டு நவம்பர் 17ம் திகதி சிறப்பிக்கடவிருக்கும் மூன்றாவது வறியோர் உலக நாளுக்கென திருத்தந்தை உருவாக்கியுள்ள செய்தியை, புதிய வழி நற்செய்தி அறிவித்தல் திருப்பீட அவையின் தலைவர், பேராயர் ரீனோ பிசிக்கெல்லா (Rino Fisichella) அவர்கள், ஆடி 13, செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறினார். நம் கண் முன்னே, இவ்வுலகில் பெருகிவரும் வறுமையின் கொடுமைகள், மற்றும் இக்கொடுமைகளை நீக்க உழைப்போர் என்ற இரு வழிகளில் திருத்தந்தையின் எண்ணங்கள் இச்செய்தியில் வெளியாகியுள்ளன என்று பேராயர் பிசிக்கெல்லா அவர்கள கூறினார். நம்மைச் சுற்றி நிகழும் வறுமை என்ற கொடுமையைக் காண மறுக்கும் நிலையையும், அதைக் கண்டாலும், பல்வேறு கருத்தியல்கள் கொண்டு அவற்றை நியாயப்படுத்தும் போக்கையும் திருத்தந்தை தன் செய்தி வழியே நம்முன் சவால்களாக படைக்கின்றார் என்று பேராயர் பிசிக்கெல்லா அவர்கள் எடுத்துரைத்தார். சென்ற ஆண்டைப்போலவே, இந்த ஆண்டும், வறியோர் உலக நாளையொட்டி, ஏழைகளுக்கு ஆற்றக்கூடிய பணிகள் கூடுதலாக இருக்கும் என்று குறிப்பிட்ட பேராயர் புனித பேதுரு வளாகத்திலும், அதைச் சுற்றிலும், வறியோருக்கு மருத்துவ உதவிகள் வழங்கும் முயற்சிகள் இவ்வாண்டு கூடுதலாக மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

கார்த்திகை 17ம் திகதி, புனித பேதுரு வளாகத்தில் திருப்பலி நிறைவேற்றியபின், 1500க்கும் மேற்பட்ட வறியோருடன், திருத்தந்தை புனித 6ம் பவுல் அரங்கத்தில், மதிய உணவை அருந்துவார் என்பதையும், பேராயர் செய்தியாளர்களிடம் கூறினார்.







## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“புனிதர்கள் பேதுரு, பவுல் ஆகிய இருவரும், கடவுள் முன்னிலையில், ஒளிவுமறைவின்றி இருந்தனர். அவர்கள், தங்கள் வாழ்வு முழுவதும், அதன் இறுதிவரை, தாழ்மைப் பண்பைக் காத்து வந்தனர், புனிதத்துவம் என்பது, தன்னை உயர்த்துவதில் அல்ல, மாறாக, தாழ்த்திக்கொள்வதில் அடங்கியுள்ளது என்பதை, இவ்விருவரும் புரிந்து வைத்திருந்தனர்”

“கிறிஸ்து ஒவ்வொரு மனிதர் மீதும் கொண்டிருக்கும் அன்பில் ஆழம்கொண்டதாக, அனைத்து மேய்ப்புப்பணியும் அமைய வேண்டும் என, அனைத்து அருள்பணியாளர்களுக்காவும், எனது பாப்பிறை மறைப்பணிக்காகவும் செபியுங்கள்”

“இன்று, செபத்தின் திருத்தூதுப்பணி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் 175வது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கின்றோம், இயேசுவின் தூய்மைமிகு இதயத்தோடு ஒன்றித்திருப்பதற்காகவும், உலகில் இரக்கம்நிறைமறைப்பணியில்ஒன்றிணைந்துநுழைவதற்காகவும், என்னோடு சேர்ந்து செபியுங்கள்”

“சந்திப்பதற்கும், இணைப்பதற்கும் துணிவும், நம்பிக்கையும் கொண்டோர் பேறுபெற்றோர்”

“இறைவேண்டலில் நாம் ஆற்றவேண்டிய முதல் பணி, இறைவனின் பெயரைப் புகழ்தல், அவருக்கு ஆராதனை செய்தல், மற்றும் அவரது வாழும் சாயலாகத் திகழும் சகோதரர்கள், சகோத-ரிகளை ஏற்றுக்கொள்ளுதல் என்பனவற்றை மறந்துவிட்டு, எத்தனை முறை நாம், கடவுளின் கொடைகளைக் கேட்பது, மற்றும், மன்றாட்டுகளின் பட்டியலைச் சமர்ப்பிப்பது என்று இறைவே-ண்டலைக் குறுக்கிவிடுகிறோம்”

“வாழ்வு அதன் முரண்பாடுகளோடும், சிறுமைகளோடும், தோல்விக-ளோடும் வரும்போது, அதனை அன்போடும் மனவுறுதியோடும் ஏற்றுக்கொள்வதே, இறைவனுக்கு நாம் சொல்லும், “ஆம்“ என்ற சொல்லின் பொருளாகும்”

“முடிவற்ற வாழ்விற்கு ஓர் இடத்தை தயாரிக்கிறது திருநற்கருணை, ஏனெனில், அதுவே வானக அப்பம்”

“இதமான வார்த்தைகளையோ, சலிப்பைத் தரும் வார்த்தை-களையோ பற்றியதல்ல ஆசீர். அது அன்புடன் கூடியதாகவும், நன்மைத்தனங்கள் பற்றி பேசுவதுமாகும். நற்கருணை என்பது ஆசீரின் பள்ளி”

“எப்போதும் இறைவார்த்தையின் சேவையில் தன்னை ஈடுபடுத்தி-யிருக்கும் திருஅவையாக, தனக்கு முக்கியத்துவம் அளிக்காமல் இயேசு கிறிஸ்துவுக்கு முக்கியத்துவம் வழங்கும் ஒரு திருஅவையாக, வாழ்வதற்கு புனித திருமுழுக்கு யோவானின் எடுத்துக்காட்டு நமக்கு அழைப்புவிடுக்கிறது”

“மலைப்பொழிவு பேறுகள், மிகச் சிறந்த திறமையைக் கொண்டிருப்-பவர்களுக்காக அருளப்பட்டவை அல்ல, மாறாக, ஒவ்வொரு நாள் வாழ்விலும், சவால்களையும், சோதனைகளையும் எதிர்கொள்கின்ற சாதாரண மனிதர்களுக்குரியவை”

“அன்பு இளையோரே, உங்கள் ஒவ்வொருவருக்கும் இவ்வாறு சொல்ல விரும்புகிறேன். கடவுள் உங்களை அன்புகூர்கிறார். உங்கள் வாழ்வில் என்னென்ன நிகழ்ந்தாலும், கடவுளின் அன்பின் மீது மட்டும் சந்தேகப்படாதீர்கள். எந்தச் சூழ்நிலையிலும், நீங்கள் வரையறையின்றி அன்புகூரப்படுகிறீர்கள்”

“இயேசு நமக்காக, உடைக்கப்பட்ட அப்பமாக மாறினார். நாம் இனி நமக்காக வாழாமல், ஒருவர் ஒருவருக்காக வாழும்வண்ணம், நம்மையே பிறருக்கு வழங்குமாறு அவர் கேட்கிறார்”

“புலம்பெயர்ந்தோருடன் இணைந்து, நற்செய்தியின் வழியில், இன்னும் கூடுதலாக ஆதரவு வழங்கும், இன்னும் கூடுதலாக உடன்பிறந்த உணர்வு கொண்ட, இன்னும் திறந்த மனம் கொண்ட கிறிஸ்தவ சமுதாயத்தை கட்டியெழுப்ப, இறைவனின் பராமரிப்பு நமக்கு வாய்ப்பளிக்கிறது”

“நாம் இறைவனின் குழந்தைகளாகவும், சகோதரர், மற்றும் சகோதரிகளாகவும் முழுமையாக வாழ்வதற்கு, தூய ஆவியார் நம்மை வழி நடத்துவாராக”

✠ ✠✠✠✠✠



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

(மத் 6:9)

பகுதி – 21

## நிறைவாழ்வே நிறைவேண்டல்

செப வாழ்வு என்பது பல மலர்களால் ஆன ஒரு மாலையைப் போன்றது. அல்லது பல உணவு வகைகள் நிறைந்த விருந்தைப் போன்றது. அனைத்துக் கூறுகளும் இணைந்திருந்தால் தான் அது முழுமையடையும். சில கூறுகள் நிறைவாகவும், சில கூறுகள் குறைவாகவும் இருந்தால், செப வாழ்வு குறையானதாகவும், ஏன் சில வேளைகளில் பிழையானதாகவும் மாறிவிடலாம்.

மனதால், சொல்லால், செயலால், உடலால் இறைவேண்டல் செய்கிறோம். ஆனால், முழுமையான செபம் என்பது வாழ்வால் செய்வதே. எனவே, நம் வாழ்வு குறையற்றதாக, நிறைவானதாக இருக்கும்படி பார்த்துக்கொள்வோம். ஒருவருடைய செப ஆர்வத்தை, ஆழத்தை அவர் எவ்வளவு நேரம் செபத்தில் செலவழிக்கிறார் என்பதிலிருந்து அல்ல, அவர் எப்படி வாழ்கிறார் என்பதிலிருந்து மட்டுமே நாம் அறிய முடியும். எனவேதான், பவுலடியார் தொடக்கக் காலக் கிறிஸ்தவர்களுக்கு இந்த எச்சரிக்கையை வழங்கினார். உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள் (எபே 5:15)

நம்முடைய வாழ்வு நிறைவாழ்வா என்பதைச் சில அடையாளங்களால் அறிந்துகொள்ளலாம் இறைவார்த்தை வழியாகவே.

**1. இடறல்கள் இல்லா வாழ்வு :** செப வாழ்வு வாழ விரும்புகிறவர்கள், சான்று பகர விரும்புகிறவர்கள் கவனிக்க வேண்டிய ஒரு குறிப்பு, அவர்களின் வாழ்வு இடறல்கள் அற்றதாக இருக்கவேண்டும் என்பது. கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார் (1 தெச 4:7) என்னும் வாக்கிற்கேற்ப ஒழுக்கம் நிறைந்த, தூய வாழ்வே சான்று பகரும் வாழ்வாகும். பவுலடியாரின் இந்த அறிவுரை அதனை நினைவுபடுத்துகிறது. தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள். அப்போது, ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள் (கலா 5:16).

பணத்தின்மீதும், பொருள்கள்மீதும் பற்றுக்கொண்ட நுகர்வு வாழ்வும் இன்று ஓர் இடறலே. எனவே, பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில், நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன், உன்னை விட்டு விலகமாட்டேன் என்று கடவுளே கூறியிருக்கின்றார் (எபி 13:5) என்னும் இறைவாக்கை மனதில் கொண்டு வாழ்வது அவசியம்.

குடி, போதை, தொலைக்காட்சி, அலைபேசி என அடிமைப்படுத்தும் பழக்கங்கள் எதுவுமின்றி வாழ்வது நல்லதொரு சான்று வாழ்வு. நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். அந்த உரிமை வாழ்வு ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள். ஒருவருக்கு ஒருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள். (கலா 5:13). அன்புக்கு மட்டுமே அடிமைகளாய் இருக்கலாம் என்பதே பவுல் தரும் சலுகை.

**2. சமூக உறவுள்ள வாழ்வு :** செப வாழ்வில் ஆர்வம் உள்ளவர்கள் சமூக நல்லிணக்கம் பேணுபவர்களாக, அனைவருடனும் நல்லுறவு கொண்டவர்களாக வாழ்தல் அவசியம். நீங்கள் உப்பின் தன்மை கொண்டிருங்கள். ஒருவரோடு ஒருவர் அமைதியுடன் வாழுங்கள் (மாற் 9:50) என்னும் இயேசுவின் சொற்படி வாழ அழைக்கப்படுகின்றோம். பவுலடியாரும், உங்களால் முடிந்தவரை எல்லாரோடும் அமைதியுடன் வாழுங்கள் (உரோ 12:18) என்று அறிவுரை கூறுகிறார்.

தன்னலமின்றி பிறருடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டு வாழ்வதே இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வு என்ற செய்தியை அடுத்தவருடைய நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள் (உரோ 15:2) என்னும் இறைவாக்கில் பார்க்கின்றோம். இதே செய்தியை ஒரு வேண்டுகோளாக மீண்டும் வைக்கின்றார் பவுல். சகோதர சகோதரிகளே, இறுதியாக நான் உங்களுக்குச் சொல்வது, மகிழ்ச்சியாயிருங்கள். உங்கள் நடத்தையைச் சீர்படுத்துங்கள். என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள். மன ஒற்றுமை கொண்டிருங்கள். அமைதியுடன் வாழுங்கள். அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார் (2கொரி 13:11)

**3. இயேசுவைப் போன்ற வாழ்வு:** இயேசுவின் சீடர்களான நாம் அவரைப் போலவே வாழ்வதே நிறைவாழ்வு. கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்பு கூர்ந்ததுபோல, நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள் (எபே 5:2) என்கிறார் பவுல். கிறஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டீர்கள். அவரோடு இணைந்து வாழுங்கள் (கொலோ 2:6) என்றும் அவரே கூறுகிறார்.

இயேசுவைப் போலவே வாழ்ந்த பவுலடியார் தம்மையும் ஓர் அடையாளமாகத் தருகிறார். நான் கிறிஸ்துவைப் போல், நடப்பதுபோன்று நீங்களும் என்னைப் போல் நடங்கள் (1கொரி 11:1 மீண்டும் இந்த அழைப்பை நீங்கள் அனைவரும் என்னைப்போல் வாழுங்கள். நாங்கள் உங்களுக்குக் காட்டிய முன்மாதிரியின்படி வாழ்பவர்களைப் பின்பற்றுங்கள் (பிலி 3:17) என்னும் இறைவாக்கில் காண்கிறோம். சுருங்கக் கூறின், நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள் (எபே 4:1)

**4. இறையச்சம் நிறைந்த வாழ்வு :** இறையச்சமே ஞானத்தின் தொடக்கம் என நாம் அறிவோம். இறைவனுக்கு அஞ்சி வாழ்வதே நிறைவாழ்வு. இவ்வுலகில் நீங்கள் அன்னியராய் வாழும் காலமெல்லாம் அவருக்கு அஞ்சி வாழுங்கள் (1பேரு 1:17) என்கிறார் பேதுரு. திருத்தூதர் யாக்கோபு, “கடவுளுக்குப் பணிந்து வாழுங்கள். அலகையை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அது உங்களிடமிருந்து ஓடிப்போகும்” (யாக் 4:7) என்கிறார்.

**5. அன்பு நிறைந்த வாழ்வு :** நிறைவாழ்வின் அடித்தளம் அன்பே. அதை அருமையாகச் சொல்கிறார் பவுலடியார். “நம்பிக்கையின் வழியாக, கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் குடிகொள்வாராக! அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக” (எபே 3:17). அந்த அன்பு எதில் அடங்கியிருக்கிறது என்னும் கேள்விக்குத் தம் திருமடலில் விடை தருகிறார் யோவான். “நாம் அவருடைய கட்டளைப்படி வாழ்வதில் அன்பு அடங்கியுள்ளது. அந்தக் கட்டளை நீங்கள் தொடக்கத்திலிருந்து கேட்டறிந்ததுதான். அதைக் கடைப்பிடித்து வாழுங்கள்” (2 யோவா 1:6).

**6. கனி தரும் வாழ்வு :** “நூறு மடங்கு பலன் தரும் நல்ல நிலத்தில் விழுந்த விதையைப் போல நம் வாழ்வு அமைந்தால், அதுவே சிறந்த செபவாழ்வு. நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே தந்தைக்கு மாட்சியளிக்கிறது” (யோவா 15:8) என்றார் ஆண்டவர் இயேசு. கடவுள் நமக்குத் தந்த பணியை நன்கு ஆற்றுவதே நம் கடமையாகட்டும். “என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு” (யோவா 4:34) என்ற இயேசுவின் வாழ்வு நமக்கு எடுத்துக்காட்டான வாழ்வு. நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் (லூக் 1:38) என்று சொல்லி, தம்மையும், தம் மகனையும் அர்ப்பணித்த அன்னை மரியாவின் வாழ்வு கனி தந்த வாழ்வு. ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி, என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என் விருப்பம் (தி.ப 20:24) என்று சொல்லி, அவ்வாறே வாழ்ந்த பவுலடியாரின் வாழ்வு கனி நிறைந்த வாழ்வு. நமது வாழ்வே நம் செபமாக மாறட்டும். நம் வாழ்வில் இறைவன் மாட்சி அடையட்டும் (யோவா 15:8) ஆமென்.

**முற்றும்**

## அன்னையே.... ஆனந்தம் கொள்வேனே

வாழ்க எனும் வாழ்த்தொலியால்
வாழ்த்தப்படும் அன்னையே
உம் திருநாமம் உயர்ந்திடவே
ஓடி வந்தேன் அம்மையே

அகிலமும் படைத்த ஆண்டவர்
மனிதனாய் பிறந்து பார்த்த
முதல் பார்வை முதல் அற்புதம்
உம் முகம் தானே
எத்தனை பாக்கியம் பெற்றீர்
தாயே...!
இறையவனே உம் கருவறையில்
உருவாகுகையில்

தாலாட்டுப் பாடி அமுதம் ஊட்டி
கை பிடித்து நடை பழக்கி
சீராட்டி நீராட்டி அழகு பார்த்து
அற்புதமாய் உருவாக்கினீரே
என் தேவனை என்னையும்
நீர் வளர்த்து விட்டால் நானும்
உயர்வடைவேனே என்
அன்னையே.

புனிதத்திலும், புனிதமாய்
வாழ்ந்திருப்பீரே பூ மகனின் தாய்
நீரல்லவோ....!
துயர் தாங்கி குறைகளோடு
இன்று நான் ஓடி வந்தேன்
மாமரியே உம் திருக்கோயில்
நானும் வர வரங்களும்
தந்தாயே. உமது அழகு வதனம்
தினம் கண்டால் பேரானந்தம்
கொள்வேனே.... பேரானந்தம்
அடைவேனே....

ஆண்டவர் உயிர்த்து விட்டார்
வாருங்கள் மகிழ்வோம்
என்றெண்ணி மலர்ந்த
முகத்துடன் ஆயிரம்
கனவுகளுடன் சென்ற எம்
சகோதரர் மாண்டு போயினர்.


பரிசுத்த தேவன் உறையும்
பரிசுத்தமான இல்லங்களில்
அலையென திரண்டு வரும்
மக்கள் கூட்டம் பரிதவிக்கும்
நிலை தான் என்ன!

உடல் வேறு தலை வேறாக
ஒருபுறம் இரத்த வெள்ளோட்டம்
மறுபுறம் இறந்த சடலங்கள்
ஒருபுறம் அடிபட்டு வீழ்ந்து
கிடப்போர் மறுபுறம் கண்ணீரும்
ஓலக்குரலும் ஒருபுறம் மீட்கும்
பணிகள் மறுபுறம்.

விதி என்பதா வினை என்பதா
அல்லது கயவரின் சதி என்பதா
இதனை, இரக்கமில்லா
இச்செயலினால் அமைதியை
தேடி அலைகின்றது. எம்
மனமும் தாயகமும்

அமைதியை தர வந்த
ஆண்டவர் நிச்சயமாய் அதை
தருவார். அவரிடம் கூறுவோம்
நம் கதையை இடைவிடாமல்
மன்றாடுவோம் அமைதி நிச்சயம்
கிடைக்கும்.

P.M. மேரி பெனடிக்கா
(மறையாசிரியை) அவிசாவளை




# புனித ஆசீர்வாதப்பர்

ஆடி – 11

உலகில் பாவம் மிகுந்திருப்பதைக் கண்ட இவர், உலகத்தைத் துறந்து காட்டிற்குச் சென்றார். சுபியாக்கோ என்னும் மலையில் இருந்த ஒரு குகையில் தவம் செய்தும், செபித்தும் வாழ்வு நடத்தினார். அருகில் வசித்த ஒரு தபோதனர் இவருக்கு ஆன்ம சாங்கோபாங்கத்தைப் பற்றி போதித்தார். ஆசீர்வாதப்பரைப் பற்றிக் கேள்விப்பட்டு அநேகர் அவருக்கு சீடராயினர். அவர்களுக்கென்று அவர் சந்நியாச மடங்களைக் கட்டி வைத்தார். அங்கு அவர்கள் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு அவர் சட்டங்களை இயற்றித் தந்தார். 520 ஆம் ஆண்டில் அவர் மோந்தெகஸினோ என்னும் இடத்திற்கு சென்று ஒரு மடத்தை நிறுவினார். அவர் எழுதிய சட்டங்கள் புகழ் பெற்றன. அந்த மடம் உலகப் பிரசித்தி பெற்றதாயிற்று. அந்த சட்டங்கள் துறவிகள் உத்தமமாகும் வழியை தெளிவுறக் காட்டுகின்றன.

**துறவிகள் தங்களை அடக்கி ஆக வேண்டும். ஏதாவது ஒறுத்தல் செய்ய வேண்டும். தாழ்ச்சி, கீழ்ப்படிதல், செபம், மௌனம், மறைந்த வாழ்வு அவற்றை அவர்கள் நேசிக்க வேண்டும்**

உலகில் மீதும் அதன் கவலைகள்மீதும் அவர்கள் பற்றின்றி வாழ வேண்டும். இவர் திவ்விய நற்கருணை உட்கொண்ட பின், பீடத்தின் முன்னின்று கைகளை உயர்த்தி செபித்துக்கொண்டே உயிர்விட்டார். 24 பாப்புமார்களையும் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட புனிதர்களையும் இவரது சபை திருச்சபைக்குத் தந்திருக்கிறது.

**செபம்: புனித ஆசீர்வாதப்பரே, நாங்கள் உம்மைப் போல் பரலோக காரியங்களைப் பற்றி அடிக்கடி சிந்தித்து பேசும் வரம்பெற்றுத் தாரும்**

# புனித மதலேன் மரியாள்

ஆடி – 22

இவள் மக்தலா என்னும் ஊரைச் சேர்ந்தவள். இது அகலிலேயா நாட்டிலுள்ளது. புனித



லூக்காஸ் எழுதிய நற்செய்தியின் ஏழாம் அதிகாரத்தில் நாம் காணும் பாவியான பெண்ணும், லூக்காஸ் பத்தாம் அதிகாரம், அருளப்பர் பதினோராம் அதிகாரம், இங்கு நாம் காணும் மார்த்தாள் லாசர் இவர்களுடைய சகோதரியும் இவளே. ஏழு பேய்களை இவளிடமிருந்து இயேசு விரட்டிய பின் (புனித. லூக்காஸ் 8:2) இவள் வேறு பல புண்ணிய பெண்களோடு இயேசுவைப் பின்சென்று அவருக்கு சேவை செய்து வந்தாள். இயேசு தனக்குச் செய்த உதவிகளுக்கு நன்றியாக இவள் தனது உடைமைகளைப் பயன்படுத்தி அவருக்குச் சேவை செய்தாள். சாகும்வரை அவருக்குப் பிரமாணிக்கமாய் இருந்தாள். இயேசு தொங்கிய சிலுவையின் அடியில் இவள் நின்றாள். உயிர்த்த இயேசு தம் அன்னைக்கு முதலில் காட்சி கொடுத்தார். அடுத்தபடியாக காட்சி கொடுத்தது இவளுக்கே. உயிர்த்த இயேசுவைக் காணும்வரை இவள் இளைப்பாறவில்லை. ‘அவரை எங்கே வைத்திருக்கிறீர்கள்? நான்அவரைத் தூக்கிக் கொண்டு செல்வேன்” என்றாள். அவரைத் தூக்கிச்செல்ல இவளால் முடியாது. என்றாலும் இச்சொற்கள் இவளது அன்பைக் காட்டுகின்றன. இவளை யூதர்கள் நாடு கடத்தினார்கள். மார்த்தாள், லாசர் இன்னும் சில சீடர்களுடன் இவள் பிரான்ஸ் நாட்டை அடைந்தாள் என பரம்பரை கூறுகிறது.

**சிந்தனை: பாவமான இன்ப சுகங்களை நேசித்த இப்புனிதை மனந்திரும்பிய பின், இயேசுவை ஆர்வத்துடன் பின்பற்றினாள். நாமும் பாவிகளாயிருந்து மனம் திரும்பி இவளைப் போல் இயேசுவை நேசிப்போம்**

**செபம்: ஆண்டவரே, உமது பேரிரக்கத்தால் இன்னும் உயிருடன் இருக்கும் நாங்கள் உமக்கு அதிக ஆர்வத்துடன் சேவை செய்ய வரம் தாரும்**



# உங்கள் குழந்தை போனில் அதிக நேரம் செலவிடுகிறதா?

***இதில் தவறில்லை அதிகரிப்பதே கூடாது!***



குழந்தைகள் முன்பு போல ஓடி ஆடி விளையாடுவது என்பது இன்று மிகவும் குறைந்து விட்டது. அவர்கள் திரை ஊடகங்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வீட்டின் வரவேற்பறைக்குள் நுழைந்தால், தந்தை போனில் இமெயில் படித்துக் கொண்டிருக்க, தாய் டிவி பார்த்துக்கொண்டிருக்க, பிள்ளைகள் ஐபேடில் விளையாடிக் கொண்டிருக்கும் காட்சியை பார்ப்பது சகஜமான ஒன்றாக இருக்கிறது. திரையில் அதிக நேரம் செலவிடுவது, அதிலும் பிள்ளைகள் மற்றும் இளம் வயதினர் இவ்வாறு செய்வது பரவலாகி வருகிறது.

இரண்டு வயது குழந்தைகள் கூட, பல்வேறு சாதனங்களில் ஆறு மணி நேரம் வரை செலவிடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஊடகங்களில் அதிக நேரம் செலவிடுவது உணவு உட்கொள்ளும் பிரச்சினை, குழந்தை பருவ பருமன், கவன சிக்கல், தூக்க பாதிப்பு என்பவற்றை உண்டாக்கலாம். திரையில் செலவிடும் எல்லா நேரங்களும் மோசமானதல்ல. மணிக்கணக்கில் பார்க்க கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் உள்ளன. குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவும் விஷயங்களும் அநேகம் உள்ளன. பல திரைகளில் விருப்பமானவற்றை பார்ப்பது குழந்தைகள் மனதை லேசாக்குகிறது.

குழந்தைக்கு போரடிக்கும் போது, வெளியே மழை பெய்து விளையாட முடியாமல் போனால், டிவி பார்க்கத்தோன்றும். நீண்ட தூரம் காரில் செல்லும் போது குழந்தை அடம்பிடித்தால், ஃபோனில் வீடியோ பார்க்கச் செய்து சமாளிக்கலாம். போனில் நண்பர்களுடன் பேச விரும்பும் போது, குழந்தை தன்னுடன் பேச சொல்லும் போது, ஐபேடை கையில் கொடுத்து சமாதானப்படுத்துவது இயல்பாக இருக்கிறது. இப்படித்தான் குழந்தைகளின் வாழ்க்கையில் திரைகளின் தாக்கம் அதிகரிக்கிறது. திரையில் செலவிடப்படும் நேரத்தை விட, திட்டமிடப்படாத விளையாட்டு நேரம் குழந்தை வளர்ச்சியில் நல்லவிதமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. கண்காணிக்கப்படாத, கட்டுப்படுத்தப்படாத திரை நேரம், வன்முறை சார்ந்த நிகழ்ச்சிகளை பார்க்க வைத்து பாதிப்பை ஏற்படுத்தலாம். பெரும்பாலான நேரங்களில் குழந்தைகள் தங்கள் வயதுக்கு பொருத்தம் இல்லாத விஷயங்களை பார்க்கின்றனர். இது எதிர்மறையான தாக்கத்தை உண்டாக்கும். திரைகளில் நேரம் செலவிடுவது பிரச்சினை அல்ல ஆனால் அது அளவுக்கு அதிகமாகி விடுவதுதான் கூடாது. இதுதான் சிக்கலை ஏற்படுத்தும்

# சிறந்த நலன் பெறுவீர்கள்!

வெறும் வயிற்றில் சீரகம் கலந்த தண்ணீரை குடித்து வருவது முகம், கூந்தல் அழகுக்கும் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கு நலம் சேர்க்கும். மேலும் பல்வேறு உடல்நல பிரச்சினைகளுக்கு இயற்கை தீர்வாகவும் அமைகிறது.



தண்ணீரில் சிறிது சீரகத்தைப் போட்டு கொதிக்க வைத்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர வயிற்றுக்கு மிகவும் நல்லது. அஜீரணத்தில் இருந்து நிவாரணம் அளிக்கும். வயிற்று வலிக்கும் தீர்வு தரும். கர்ப்பிணி பெண்களும் சீரக நீர் பருகலாம். அது கர்ப்பகாலத்தில் செரிமானத்தை மேம்படுத்த உதவும். கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்புகளின் செரிமானத்துக்கு தேவையான நொதிகளைத் தூண்டும். பால் சுரப்பையும் ஊக்குவிக்கும். செரிமான பிரச்சினைகள் இருந்தால் சீரகத் தண்ணீரை குடிப்பதால் உடனடியான நிவாரணம் கிடைக்கும். சீரகத்தில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கல் பிரச்சினையிலிருந்து விடுபட உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை சீராக பராமரிக்க சீரக நீர் குடிக்க வேண்டியது அவசியம். உடலில் நோய் எதிர்ப்பாற்றலை அதிகப்படுத்தும். மேலும் ரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்க வழிவகுக்கும். சீரக நீர் சுவாச கட்டமைப்புக்கும் நன்மை சேர்க்கும். சளியை குணப்படுத்தவும் உதவும் உயர் ரத்த அழுத்தப் பிரச்சினை உள்ளவர்கள் சீரக நீரை குடித்தால் அதில் உள்ள பொட்டாசியம் ரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க உதவுகிறது.

சீரக நீர் உடலில் இருந்து நச்சுகளை வெளியேற்றவும் உதவுகிறது. பித்தப்பைக்கும் பாதுகாப்பு அளிக்கும். கல்லீரலும் பலம் பெறும். உடல் ஆரோக்கியத்துக்கு இரும்பு சத்து மிக அவசியம். இரும்பு சத்து குறைபாட்டையும் சீரக நீர் சீர் செய்யும். மாதவிடாய் காலத்தில் வலி நிவாரணியாகவும் விளங்குகிறது. அந்த சமயத்தில் சீரக நீர் பருகுவதன் மூலம் வலி கட்டுப்படும். சரும பளபளப்புக்கும் சீரக நீரை பயன்படுத்தலாம். அதில் பொட்டாசியம் மட்டுமின்றி கால்சியம், செலினியம், மாங்கனீஸ் உள்ளிட்டவை இருக்கின்றன. அவை தோலுக்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. சீரகத்தில் உள்ள இரும்பு சத்து ஹீமோகுளோபின் அளவை அதிகரித்து உடலில் ரத்தசோகையை குணப்படுத்தும். சளி பிரச்சினை, சுவாசக் குழாயில் உள்ள நோய்க் கிருமிகள் அழிந்து சளி மற்றும் இருமலில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும். தொடர்ந்து இந்த நீரைக் குடித்து வருவதால் ஞாபக சக்தி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யலாம். சீரக நீருடன் மஞ்சள் தூளை கலந்து முகத்தை கழுவினால், முகம் பளபளக்கும். சருமம் மென்மையாக, மிருதுவாகவும் இருக்கும். சீரகத்தில் உள்ள விட்டமின் சத்து இளமையை தக்கவைக்க உதவும். இதில் உள்ள ஊட்டச் சத்துக்கள் கூந்தலை வலுவாக்குவதோடு. முடியின் வேர்கள் வளர்வதற்கு உதவும். முடி உதிர்தலை தடுக்கும்.

## 01 மனிதர்கள்...

ஆனால் எமது அருகில் இருக்கும் தங்கள் குடும்பத்தவர்களை சந்திக்காது வாழ்ந்து வருகின்றனர். தங்கள் குடும்பங்களின் இன்ப துன்பங்களை கண்டு கொள்ளாமல் தூரத்தில் உள்ளவர்களுடன் அலைவரிசை மூலம் தொடர்பாடலில் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றோம். இவ்வாறு சந்திப்புக்களைப் பற்றி தனது மறையுரையில் கூறினார். சிங்கள மறையுரையை கொழும்பு உயர்மறைமாவட்ட துணைஆயர் மேதகு. அந்தனி ஜெயக்கொடி ஆண்டகை ஆற்றினார்.

## 01 தில்லந்துவ...

அதனால் எமக்கு அளப்பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசியல் இலாபத்திற்காக மனித உயிர்களை பலியெடுத்தல் பிழையாகும். கடந்த 40-50 வருடங்களாக எமது நாட்டில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்கள் அரசியல் தேவைகளுக்காகவே இடம்பெற்றன என்று கூறினார்கள்.

தில்லத்துவ பங்கு தந்தை நவின் சந்தசிறி பெரேரா அடிகளாரின் தலைமையில் புனித அந்தோனியார் ஆலய அர்ச்சிப்பின்போது பல அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் கலந்துக்கொண்டனர்.

திருப்பலியின் இறுதியில் தில்லந்துவ மக்களை சந்தித்து கலந்துரையாடியதுடன் தல்லத்துவ புனித சூசையப்பர் ஆலயத்தில் கனவு காணும் புனித சூசையப்பரின் திருச்சுரூபமும் திருநிலைப்படுத்தப்பட்டது.

## 03 மனிதத்தை மறந்த...

பார்க்கவேண்டும். இவ்வுலக வாழ்வில், உடன் வாழ்கின்ற சகோதரிகள், சகோதரர்களில் இறைவனைக் கண்டு பழகினால் தான் மறுவுலக வாழ்வில் இறைவனைக் காணமுடியும்.

இறைவனை விசுவாசிக்காத ஒரு விஞ்ஞானி விண்கலத்தில் ஏறிப்போய் விண்வெளி ஆராய்ச்சி செய்துவிட்டு, பூமிக்கு திரும்பியவுடன், கிண்டலாக, "ஆகாயத்திலும், விண்வெளியிலும் தேடிப்பார்த்து-விட்டேன். இந்த அகிலத்தைப் படைத்ததாய்க் கூறப்படும் அந்த படைப்பாளி பரமனை, ஆண்டவனைக் காணவில்லையே" என்று கொக்கரித்தானாம். அதைக் கேட்ட ஒரு குருவானவர் சொன்னாராம், "அந்த விஞ்ஞானி, இந்த பூமியில் நடமாடும் மனிதர்களிடம் ஆண்டவரைப் பார்த்துப் பழகியிருந்தால்தான், அந்த விண்வெளியிலும் ஆண்டவரைப் பார்த்திருக்க முடியும்" என்று. உண்மைதான், மறுவுலகத்தில் ஆண்டவனைக் கண்டடைய வேண்டுமானால் இவ்வுலகில் அவரைப் பார்த்துப் பழகவேண்டும்.

பேரின்ப வீட்டை உரிமையாக்கிக் கொள்ளவும் இறைவனின் பிரசன்னத்தை முழுமையாக அனுபவித்து அவரை முகமுகமாய் தரிசிக்கவும் இயேசு கொடுக்கின்ற நிபந்தனை "வேதாகமத்தை அட்டை வழி அட்டை படித்து கரைத்துக் குடித்துவிட்டாயா?" என்பதல்ல.

"பெரிய பெரிய மேடைகளில் ஏறி எத்தனை ஆயிரக்கணக்கான மக்களுக்கு போதித்தாய்?" என்பதல்ல, "எத்தனை ஆயிரம் மக்களை மனம்மாற்றி ஞானஸ்நானம் கொடுத்தாய்" என்பதல்ல... இவையெல்லாம் தேவைதான் என்றாலும், இவையெல்லாம் எல்லாராலும், எப்போதும் முடியாதவை. எனவே, மிகவும் முக்கியத்துவம் பெற்ற, எல்லாரும் போதிக்க வேண்டிய ஒன்று. நமது அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் எதார்த்தமான சூழ்நிலையில் நமது உதவியை நாடி நிற்பவர்களின் தேவையை உய்த்துணர்ந்து உதவுகிறோமா? என்றுதான் இயேசு கேட்கிறார். அவர்களின் சமூகத் தேவைகளையும், உளவியல் தேவைகளையும் நிறைவேற்றுகிறோமா என்றுதான் கேட்கிறார்.

அதேபோல், ஆண்டவரின் மீது நாம் காட்டும் அன்பும், நமது ஆன்மீகமும், நமது நடைமுறை வாழ்வில் வெளிப்படவேண்டும். கண்களால் காண்கின்ற மனிதர்களை அன்பு செய்யாமல், கண்களால் காணமுடியாத கடவுளை நாம் எப்படி அன்பு செய்யமுடியும்? நமது ஆன்மீக முயற்சிகளும், பக்தி வழிபாடுகளும், மதக்கோட்பாடுகளும் நம்மை மற்ற மனிதர்களை சகோதர, சகோதரிகளாய்ப் பார்க்க கற்றுக்கொடுக்க வேண்டும், ஆன்மீகத்தைப் பற்றிப் பேசவேண்டுமானால், அதில் உள்ளடங்கியிருக்கிற மனிதத்தை மறந்துவிடக்கூடாது.

மனிதத்தோடு கூடிய ஆன்மீகம்தான் முழுமையானது, நிறைவானது, மனிதத்தை மறந்த ஆன்மீகம் அர்த்தமற்றது!

## 10 விவிலியப் பகுதி விடைகள்

46. பேய்களின்தலைவனைக் கொண்டே (3:22)
47. உவமைகள் வாயிலாக (3:23
48. அரசு, வீடு, சாத்தான் (3:24-26)
49. தூய ஆவியாரை பழித்து உரைப்பவர் (3:28-29)
50. இயேசுவின் தாயும் அவருடைய சகோதரர்களும் சகோதரிகளும் (3:31)
51. மக்கள் கூட்டம் (3:32)
52. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் (3:35)
53. பறவைகள் (4:4)
54. வேர் இல்லாமையால் (4:5)
55. விளைச்சல் (4:7)


## மணமகன் தேவை

32 வயதுடைய, அழகிய, குணமான கத்தோலிக்க மணமகளுக்கு (மன அழுத்தத்திற்கு Treatment எடுப்பவர்) புரிந்துணர்வுடைய, நல்ல குணமான மணமகனை பெற்றோர் தேடுகின்றோம். (9535)

தொடர்புகளுக்கு : 0777227808

றோமன் கத்தோலிக்க சிவந்த அழகிய 29 வயதுடைய, 5'4" உயரம், சிங்கப்பூரில் ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு படித்த, பண்புள்ள, Handsome மணமகன் தேவை. வெளிநாடுகளில் கடமையாற்றுபவர்களுக்கு விஷேடமாக சிங்கப்பூரில் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0112338362, 0718231388 (13866)

## வீடு விற்பனைக்கு

பிற்றகோட்டை, ஆனந்தா பாளிக்கா மாவத்தையில் பிரதான விதியிலிருந்து 25 மீற்றர் தொலைவில் 1500 சதுரஅடி விஸ்தீரணமுள்ள 4 படுக்கை அறைகள், 2 குளியல் அறைகளை உள்ளடக்கிய 5 பேர்ச் காணியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்குண்டு. சிறிய கார் உள்நிறுத்த முடியும். விலை 21 மில்லியன் (பேசித்தீர்க்கலாம்)

தொடர்பு : 0112813315 (15039)



25ம் வருட நினைவு



திரு. J. டேனியல்

24ம் வருட நினைவு



திரு. M.C.L யோவான்

48ம் வருட நினைவு



திரு. V. லூர்த்து பர்னாந்து

32ம் வருட நினைவு



திருமதி. மரிய அலங்காரம் பர்னாந்து

ஒரு வருட நினைவு



திரு. D. மார்கஸ்

3 மாத நினைவு



திரு. J.P.லயனர் பர்னாந்து (13773)

## 3ம் மாத நினைவுநாள்

எம் உடன் 12 ✠ 10 ✠ 1956



இறைவன் உடன் 07 ✠ 04 ✠ 2019

**சரோஜினி செபஸ்தியன்**

**என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சம் ஆக்குவார் (தி.பா 18:28)**

அம்மா நீங்கள் எங்களை விட்டு சென்றாலும் இறைவன் உங்களுடன் இருப்பதை நினைத்து அமைதி கொள்கின்றோம். (குடும்பத்தினர்) (15057)

## 2020 - பாலர் வகுப்புக்கான அனுமதி

**ஜனவரி 2020ம் ஆண்டு பாலர் வகுப்பிற்கான மாணவர்களை சேர்த்துக்கொள்ளல்.**

டிலாசால் சகோதரர்களால் நிர்வாகிக்கப்படும் புனித சூசையப்பர் பாலர் பாடசாலை (ஆங்கில மொழி மூலம் English Medium) 130, டிலாசால் வீதி, கொழும்பு 15.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் பி.ப 1.00 மணி வரை – 2529729**

**சகோதரர் ராஜன் (இயக்குனர்) 0776000574** (12314)


## 11 க.பொ.த உயர்தரம்...

இருக்கும். மூளையும் தயாராக இருக்கும். தேர்வு மையத்துக்குக் கொஞ்சம் முன்னதாகவே சென்றடைந்து விடுவது நல்லது. அரக்கப் பரக்க கிளம்பி வேகமாகப் பயணம் செய்வதைத் தவிர்க்கலாம். ஒரு சின்ன விபத்தில் தேர்வைக் கோட்டைவிட்டால் கூட ஒரு ஆண்டு காத்திருக்க வேண்டி வருமல்லவா!

### தேர்வறைக்கு வெளியில்

பதற்றத்தை அதிகப்படுத்தும் வாய்ப்புக்கள் தேர்வு அறைக்கு வெளியிலும் இருக்கும். நண்பர்கள் வழியாக இந்தப் பதற்றங்கள் வரும். "அதைப் படித்தாயா? இதைப் படித்தாயா?" என்பார்கள். அந்தக் கேள்வி கண்டிப்பாக வரும் என்பார்கள். புதிய சந்தேகங்களைக் கிளப்புவார்கள். கேள்வித்தாள் வெளியாகிவிட்டதாகவும் சொல்வார்கள். முடிந்தவரை இந்த விவாதங்களில் எல்லாம் கண்டுகொள்ளாமல் சிரித்து விட்டு விடுவதே உத்தமம். சூடான விவாதங்கள் எதுவும் தேவையில்லை. அமைதியாய் இருங்கள். உங்கள் தேர்வுக்காகக் காத்திருங்கள். ஆண்டு முழுவதும் பயிற்சி செய்வோம். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வோம். பதற்றமில்லாமல் தேர்வைச் சந்திப்போம் வெற்றி பெறுவோம்.

## 02 1971...

செத்சரண அமைப்பின் இயக்குனர் லோறன்ஸ் ராமநாயக்க, குடும்ப நல அப்போஸ்தலிக்க இயக்குனர் அருட்தந்தை குளோட் நோனிஸ், கட்டுவாபிட்டி பங்குதந்தை மஞ்சுல நிரோசன் அடிகளாருடன் மகிம குணவர்தன, அருட்சகோதரிகளும் கலந்துக்கொண்டனர். கட்டுவாபிட்டி சிறுவர் சிறுமிகள் 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டனர்.

## 05 நவீன போதைகள்.

இடத்தில் பிரபு பத்தாரா என்ற ஊர்தி ஓட்டுனர் கரடி ஒன்றால் கொல்லப்பட்டார். அவர் செய்த குற்றம் என்ன? காட்டு வழி ஒன்றில் செல்லும்போது, இளைப்பாற இறங்கிய இந்தப் பிரபு பத்தாரா அங்கு வழியில் காயமடைந்து, படுத்துக் கிடந்த கரடி ஒன்றோடு Selfie எடுக்க முயல, கண்விழித்த கரடி, தன்னைப் புகைப்படம் எடுக்க முயன்ற பிரபுவை நித்திய புகைப்படமாக்கிவிட்டது. Carnegie Mellon என்ற அமெரிக்க பல்கலைக்கழகத்தின் ஆய்வு ஒன்றின்படி, கடந்த இரண்டு வருடங்களில், உலகில் Selfie எடுத்து இறந்தவர்களின் எண்ணிக்கை 127. ஓடும் இரயிலின் முன் படம் எடுப்பது, சீறும் வனவிலங்குகளின் முன் படம் எடுப்பது, பாலத்தின் மீதிருந்து குதித்தும்கூட நம் ஆட்கள் Selfie எடுத்திருக்கிறார்கள்.

உளவியலாளர்களின் கருத்துப்படி இன்றைய இளம் தலைமுறையினர், தனிமையைக் கண்டு தெரியாத மனிதரோடு பகிர்வதில் இனிமை காண்கின்றனர். அதோடு இவர்களின் தனிமையைப் போக்கவரும் அலைபேசி சம்பந்தப்பட்ட விளையாட்டுக்கள் தங்களை ஆட்டுவிக்கும் இவர்களுக்கு அடிபணியும் தன்மை கொண்டவை. நிஜ வாழ்வில் வரும் எதிர்ப்பு, முகம் சுளிப்பு போன்ற எதிர்வினைகள் எதுவும் இல்லாததால், அலைபேசிகள் தரும் செயற்கை நெருக்கம், உண்மையான, நேசிப்பாகப் பார்க்கப்படுகின்றது.

போதைகள் பல்வேறு நிலைகளில், பல்வேறு சமூகக் குழுக்களைக் குறிவைத்து இழுக்கின்றன. உதாரணமாக, சாராயம் போன்ற போதைகள், நம் இளைஞர்களுக்குப் பெரிதும் இல்லை எனலாம். அதேசமயம், உலகமயமாக்கலால் உந்தித்தள்ளப்படும் மேல்தட்டு, பணக்கார மக்களுக்கு இன்றைய போதை - பொருட்களை வாங்கிக் குவிப்பது நுகர்வுக் கலாச்சாரத்தின் தூண்களாக, தூதுவர்களாக, தங்களையே நினைத்துக் கொள்ளும் இவர்களின் பிடித்த பொழுதுபோக்கு - பொருட்களை வாழ்த்தி, வணங்கி, வாங்கி, அடுக்குவது தேவையே இல்லாமல் வெறுமனே, வெட்டியாக பெட்டி பெட்டியாகப் பொருட்களை வாங்கி வைக்கும் இந்த மனநிலையும் ஒருவிதப் போதையே.

போதை என்பது ஒருவகையில் நம்மை அடிமைப்படுத்தும் ஓர் இம்சைக் காரணி. இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த அடிமைத்தனத்தை, நாமே விரும்பி ஏற்றுக்கொள்வதுதான். ஒரு பேய் வெளியே சென்று வேறு ஏழு பேய்களைக் கூட்டிவரும் என்ற கணக்காய், ஒரு போதைத்தனம் ஒருவருக்கு வரும்போது, அந்தப் போதை தனக்கு இசைவான மற்றப் போதைகளையும் கூட்டிவந்துவிடும் என்பது உலகியல் உண்மை. எனவேதான், போதை என்பதை, ஒருமையில் அழைக்காமல், போதைகள் என்பது மிகச் சரியானது.

போதை என்பது ஒரு நோய். ஒரு வகையில் போதை நோயானது, குணப்படுத்தக்கூடியதே. குடிநோயோ, மயக்கத்தைத் தரும் போதைப் பாக்குகளை உபயோகிக்கும் பழக்கமோ, மற்ற பிற கொடிய போதைப் பழக்கங்களோ அல்லது இக்கட்டுரையில் நாம் அலசிய அலைபேசி மற்றும் தொடர்பு சாதனப் போதையோ, எவ்வகைப் போதையானாலும், அதற்கு மாற்று உண்டு என்று நம்பவேண்டும். இப்படிப்பட்ட போதை நண்பதை, அவரின் குடும்பம், பக்குவமாய் ஏற்று, பண்படுத்த, ஆவண செய்ய வேண்டும். இப்படிப்பட்ட, துன்புறும் நண்பதைத் தகுந்த உளவியல் மற்றும் மனநல மருத்துவரிடம் கூட்டிச் சென்று தகுந்த சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

"போதை - வாழ்வை முடிக்கும் - தவறை உணர்ந்து திருத்தும் வாழ்வோ - புதிய புனைவுகளைத் தரும் - ஒரு புதிய வசந்தத்திற்கு இட்டுச் செல்லும்"

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்




| அளவுகள் Single Column | விலைகள் 1½" width | அளவுகள் Double Column | விலைகள் 3½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1½" SC | 675/- | 1½" DC | 1,350/- | 1½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2½" SC | 1,125/- | 2½" DC | 2,250/- | 2½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3½" SC | 1,575/- | 3½" DC | 3,150/- | 3½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4½" SC | 2,025/- | 4½" DC | 4,050/- | 4½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6½" SC | 2,925/- | 6½" DC | 5,850/- | 6½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |

- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |



## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீபய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்